# உதயன்

பக்கங்கள் - 20 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :216 ஆனி 18 ஆம் நாள் வியாழக்கிழமை 02 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051


## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 2

கரவெட்டிப் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். சிவசுப்பிரமணியம் சின்னையா என்ற 46 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்ட 17



## பெருமளவு போதைப்பொருள் வடமராட்சியில் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 2

பருத்தித்துறை நகர பேருந்து நிலையத்தில் வைத்து 2 கிலோ ஐஸ் போதைப் பொருளும் வல்வெட்டித்துறைப் 17

## இரண்டரைக்கோடி பெறுமதியான கஞ்சாவுடன் ஒருவர் கைது 17

# தேர்தல் பரப்புரைக்காக இராணுவம்

### தடுத்து நிறுத்துமாறு தேர்தல் ஆணையரிடம் ஐக்கிய மக்கள் சக்தி அவசர கோரிக்கை

கொழும்பு, ஜூலை 2

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு தேர்தல் பரப்புரையில் இராணுவத்தினரை ஈடுபடுத்தியுள்ளது. இதனை தேர்தல் ஆணைக்குழு உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அவசர கோரிக்கை விடுத்துள்ளது. 19



# வெள்ளைக் கொடிகளுடன் எவரும் சரணடையவில்லை

### மாவையின் அறிக்கைக்கு சவேந்திர இப்படிப் பதில்

கொழும்பு, ஜூலை 2

'இறுதிப் போரில் வெள்ளைக் கொடிகளுடன் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் எவரும் 19



## ஓட்டோ – ரயில் மோதல் மௌலவி ஒருவர் இறப்பு

வவுனியா, ஜூலை 2

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலுடன் முச்சக்கரவண்டி மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். வவுனியா செட்டிக்குளம் துடரிக்குளம் 19

## அங்கஜனுக்கு எதிராக இரு முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் அங்கஜன் இராமநாதனுக்கு எதி 19

## விக்னேஸ்வரனுக்கு எதிராகவும் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 2

அண்மையில் மல்லாகம் குளமங்கால் பகுதியில் நடைபெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பரப்புரை கூட்டத்தின்போது 19

## எரியுண்ட நிலையில் வல்லையில் சடலம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

வல்லைவெளியில் உள்ள பற்றைக்காட்டில் எரிந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்று மாலை அந்தப் பகுதியால் சென்றவர்கள் சடலத்தை அவதானித்து 17

### சிறீதரன் கள்ளவாக்கு விவகாரம்:

## தேர்தல் ஆணைக்குழுவில் சுதந்திரக்கட்சி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

75 கள்ளவாக்குகள் போட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல்கள் முறைப்பாட்டுப் பிரிவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் எஸ். செலஸ்ரின் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார். 19



## 2025ஆம் ஆண்டில் அனைவருக்கும் வீடு

### வடக்கில் வாக்குறுதி வழங்கினார் சஜித்

வவுனியா, ஜூலை 2

நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் பிரதமராகி 24 மணி நேரத்தில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப் படுவதோடு 2025ஆம் ஆண் 19

### நிதி மோசடியை வெளிப்படுத்திய

## மகளிர் அணி உறுப்பினர்கள் கட்சியிலிருந்து இடைநிறுத்தம்

மட்டக்களப்பு, ஜூலை 2

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட மகளிர் அணிச் செயலர் திருமதி விமலேஸ்வரி சிறி காந்தரூபனை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் 17

# கருணாவின் நிலைப்பாட்டை மஹிந்த வெளிப்படுத்த வேண்டும்

## முன்னாள் எம்.பி.ஹர்சன ராஜகருணா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் நிறுவப்படும் புதிய அரசில் கருணா அம்மான் இணைத்துக்கொள்ளப்படுவாரா? என்பதை தேர்தலுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது; போர் வெற்றியையும் நாட்டின் படையினரையும் இழிவுபடுத்தும் வகையில் கருணா அம்மானது அண்மைய கருத்து வெளிப்பாடு அமைந்துள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் கருணா அம்மான் தேர்தலில் வெற்றிபெற்றால் மஹிந்த ராஜபக்ச தரப்புக்கே ஆதரவு வழங்குவார். புதிதாக உருவாக்கப்படும் அரசில் கருணா அம்மான் இணைத்துக்கொள்ளப்படுவாரா? அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுமா?என்பது குறித்து பிரதமர் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

அவ்விதம் அவர் அரச தரப்பில் இணைத்துக்கொள்ளப்பட மாட்டாரரெனில் பொதுத் தேர்தலின் முன்னர் அதனை நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் -என்றார். (ப)






# கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டம் திருமலையில்

திருகோணமலை, ஜூலை 2

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது அறிமுக பிரசாரக்கூட்டம் திருகோணமலையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்தப் பிரசாரக் கூட்டம் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டச் செயலாளரும், திருக்கோணமலை நகராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவருமான க. செல்வராஜாவின் தலைமையில் திருகோர்ணமலையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிவன்கோவிலடியில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மாவட்டத் தலைவர் ச.குகதாசன், கூட்டமைப்பின் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். (ப-40)



# சிறுவர் கண்காணிப்பு குழுக் கூட்டம்

கொடிகாமம், ஜூலை 2

கைதடி தெற்கு ஜே/291 கிராம மட்ட சிறுவர் கண்காணிப்பு குழு கூட்டம் நேற்றுமுன்தினம் கைதடி தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் மதியம் ஒரு மணியளவில் கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரிவு சமுர்த்தி அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர்,பொதுச் சுகாதார பரிசோதகர், பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், மாதர் சங்கத் தலைவர்கள், சமுர்த்தி சங்க தலைவர்கள், கிராம சக்தி உறுப்பினர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். சமூக இடைவெளி பேணப்பட்டு இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதில் தாய், தந்தை இல்லாதவர்களுக்கு உதவி வழங்குவது தொடர்பான தீர்மானமும் எடுக்கப்பட்டது. (ஜ-159)

# சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிடில் ஆதரவளியோம்

## அதிபர், ஆசிரியர் ஒற்றுமை சங்கம் கோத்தாபயவுக்கு கடிதம்

கொழும்பு, ஜூலை 2

**அதிபர், ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தேர்தலுக்கு முன்னர் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்காவிட்டால், அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதைச் சிந்திக்க வேண்டிவரும். இவ்வாறு அதிபர், ஆசிரியர் ஒற்றுமை சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அந்தச் சங்கம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதில் மேலும் உள்ளதாவது: 'கொவிட் 19 வைரஸ் பரவலுக்கு முன்னர் தீர்வு காணப்பட வேண்டிய பல சிக்கல்கள் ஏற்பட்டிருந்தமை இரகசியமல்ல. இவ்வாறான பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு குறிப்பிட்டு பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வைரஸ் பரவல் காரணமாக அவை தற்போது மூடி மறைக்கப்பட்டுள்ளன. வைரஸ் பரவலை கட்டுப்படுத்தியமை தொடர்பில் நாங்கள் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கின்றோம், அதேவேளை, தீர்வுகாணப்பட வேண்டிய பல பிரச்சினைகளுக்கு இதுவரையிலும் தீர்வைப் பெற்றுக்கொடுக்காமல் அமைதியாக இருந்துவிட்டு, பொதுத்தேர்தலில் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொடுக்குமாறு நீங்கள் முன்வைத்துவரும் கோரிக்கைக்கு எங்களால் இணக்கம் தெரிவிக்க முடியாது.

1994 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படும் அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பளப் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதுடன், அவர்களின் சேவை தொடர்பில் காணப்படும் சட்டவிதிகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய திருத்தங்களையும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்றவேண்டும்.

அரச நிர்வாக பிரிவின் 2016/03 சுற்றுநிருபத்தினால் வழங்கப்பட்டிருந்த ஊதியத்தை, 2016-2020 ஆகிய காலப்பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கி பின்னர் நிறுத்தி வைத்தமை தொடர்பிலும் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இந்த பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் பொதுத் தேர்தலுக்கு முன்னர் எமக்கு அறிவிக்காவிட்டால், தேர்தலின் போது அரசாங்கத்துக்கு ஆதவளிப்பது தொடர்பிலும் சிந்தித்து பார்க்கவேண்டி ஏற்படும்-என்றுள்ளது. (ஐ)



## மன்னார் பிரதேச செயலக காணி அலுவலகம் திறப்பு

மன்னார், ஜூலை 2

மன்னார் பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்களின் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் காணி தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறைகளை மேற்கொள்வதற்கான சேவைகளை முன்னெடுக்கும் முகமாக காணி அலுவலகம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது.

32 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துக்கான நிதி அனுசரணையை யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வழங்கியுள்ளது.

மன்னார் நகர பிரதேச செயலாளர் ம.பிரதீப் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ், சிறப்பு விருந்தினர்களாக யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் வடமாகாணப் பொறுப்பதிகாரி வே.பிரபாகரன் மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

கட்டடத்தின் ஆவணங்கள் வைபவ ரீதியாக பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டன.

இந்தக் காணிக்கிளையின் ஊடாக எதிர்வரும் காலங்களில் மன்னார் பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்களின் காணி ஆவணங்கள் பெறுதல், காணி வழங்குதல், வீட்டுத்திட்டம் தொடர்பான தேவைகளை நேரடியாகப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-60,213,56)

## வாள்வெட்டில் குடும்பஸ்தர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 2

வாள்வெட்டுக்கு இலக்காகி காயமடைந்த 50 வயது குடும்பஸ்தர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமத்தில் நடந்துள்ளது.

வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

கொடிகாமம் நாகநாதர் வீதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே காயமடைந்தார். சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-9)

## முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக சித்திரிக்கிறது தற்போதைய அரசு!

### முன்னாள் எம்.பி தௌபீக் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

முஸ்லிம் சமூகத்தை, பயங்கரவாதச் சமூகமாக இந்த அரசாங்கம் சித்திரித்து வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர், முஸ்லிம் சமூகம் பல இன்னல்களுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகின்றது. கடந்த வாரம், என்னையும் எனது கட்சித் தலைமைகளையும், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அழைத்து விசாரித்தனர். 12 வருடங்களாக, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சமூகத்துக்கு என்னாலான சேவைகளைச் செய்திருக்கிறேன். மாவட்டத்தின் முக்கிய தேவைகளை இனங்கண்டு, அவற்றை நிவர்த்தி செய்து வருகிறேன்.

இந்த அரசாங்கம், முஸ்லிம் மக்களை ஒடுக்கி, அடக்கப் பார்க்கிறது. நாங்கள், தனி நாடோ அல்லது தனி இராச்சியங்களையோ கேட்கவில்லை. முஸ்லிம் சமூகம், ஆரம்ப காலம் தொட்டு, படையினருக்கும் நாட்டுக்கும் தேவையான உதவிகளைத்தான் செய்துள்ளது.

இனிமேலும் செய்யும். நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கு ஏற்ப, சிறுபான்மை வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். நாம் நமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும்-என்றார். (ப)

## தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் திறப்பு

மட்டக்களப்பு, ஜூலை 2

கிழக்கு மாகாணத்துக்கான தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் திராய்மடு பிரதேசத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் நாயகம் டப்ளியு.எம்.எம் .பி .வீரசேகர பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆய்வுகூடத்தை திறந்துவைத்தார்.

இது தொடர்பில் கமநல அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டுமானங்களின் மூலப் பொருள்களான கல், மண், சிமெந்து, கொங்கிறீட் போன்றவற்றின் தரம் மற்றும் விவசாய நிலம் உட்பட ஏனைய நிலங்களின் மணலை ஆய்வு செய்து அறிக்கையிடும் நிர்மாண தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடமாக இந்த ஆய்வுகூடம் அமைகின்றது. இத்திட்டத்திற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் சுமார் 3.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இதனூடாக கிழக்குமாகாணத்தில் விவசாய நிலங்களினுடைய மண் பரிசோதனை, மற்றும் ஏனைய மண், கல் தரப்பரிசோதனை, கொங்கிரீட் மற்றும் சீமெந்து தரப்பரிசோதனைகள் விசேடமாக விவசாய நிலங்களினது மண்ணின் தரத்தினை பரிசோதனை செய்து அந்நிலத்துக்குப் பொருத்தமாக பயிர்வகைகளை செய்கை செய்வதற்குமான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்படும் - என்றார். (ப-150)

## வெட்டுக்காயத்தோடு ஆணின் சடலம் மீட்பு

திருகோணமலை, ஜூலை 2

கடற்கரையில் கத்திக்குத்துக் காயங்களுடன் ஆணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிச்சேனை பகுதியிலுள்ள கடற்கரையில் இருந்தே இந்தச் சடலம் நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். புத்தளம் காரியப்பர் வீதியைச் சேர்ந்த முஹம்மது ஹனிபா ஹாரிஸ் (வயது60) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டார். இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## தபால் வாக்களிப்புக்கு 15,200 பேர் தகுதி

திருகோணமலை, ஜூலை 2

எதிர்வரும் பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் அஞ்சல் வாக்குகளைச் செலுத்த 15 ஆயிரத்து 200 பேர் தகுதிபெற்றுள்ளனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்துள்ளார். அதேவேளை தபால் மூல வாக்களிப்புக்கானவாக்குச் சீட்டுக்கள் நேற்றுமுன்தினம் தபால் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது என்றும் தெரிவத்தாட்சி அலுவலர் மேலும் தெரிவித்தார். (க)

# இணையனுசரணை நாடுகள் இலங்கையில் அதிருப்தி!

ஜெனிவா, ஜூலை 2

**மோதலின்போது பாரதூரமான உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளிற்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டமை குறித்து இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.**

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 44ஆவது அமர்வில் கனடா, ஜேர்மனி, வடமசெடோனியா, மொன்டிநீக்ரோ, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளை உள்ளடங்கிய குழு இலங்கை தொடர்பான அறிக்கையை வெளியிட்டன. மனித உரிமைகளிற்கான பிரிட்டனின் தூதுவர் ரீட்டா பிரென்ஞ் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இலக்குகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதில் உறுதியுடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கை கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைந்தளவுக்கு நோயாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தியுள்ளது. மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளது போன்று கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக வழமைக்கு மாறான நடவடிக்கைகளை, மனித உரிமைகளைப் பறிப்பதற்காகப் பயன்படுத்தக்கூடாது.

சிறுபான்மை குழுக்கள் இலக்கு வைக்கப்பட்டு புறக்கணிக்கப்படுவது, சுனில் ரத்நாயக்கவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை, மோதலின்போது பாரதூரமான உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளிற்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டமை, பொதுநிர்வாகம் மற்றும் பொதுமுயற்சிகள் பரந்துபட்ட அளவில் இராணுவ மயப்படுத்தப்பட்டமை குறித்த இலங்கையின் மனித உரிமை அமைப்புகளின் கவலைகளை தாங்களும் பகிர்ந்து கொள்வதாக ரீட்டா பிரென்ஞ் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் ஜனநாயக சூழல் வெளிப்படையானதாகவும் பொறுப்புக்கூறுவதாகவும் காணப்படுவதை உறுதி செய்யுமாறும், கைதுசெய்யப்படுதல் மற்றும் தடுத்து வைத்தலின்போது உரிய நடைமுறைகளை பின்பற்றுமாறும், அவை சர்வதேச மரபுகள் மற்றும் உலகளாவிய உரிமைகளுடன் இணங்கிப்போவதை உறுதிசெய்யுமாறும் அவர் இலங்கை அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ.5)

## தாய்,சேய் சிகிச்சை பிரிவு இடமாற்றம்

சாவகச்சேரி, ஜூலை 2

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினரால் நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலைய மண்டபத்தில் இதுவரை காலமும் இயங்கிய, தாய்,சேய் சிகிச்சைப் பிரிவு ஜூலை மாதம் தொடக்கம் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பண்டிதர் சிவலிங்கம் நினைவு இலவச மருத்துவ சேவை நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான கிளினிக் பிரதி மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காவது புதன்கிழமைகளில் நடைபெறும். ஜூலை மாதத்துக்குரிய முதலாவது கிளினிக் எதிர்வரும் எட்டாம் திகதியும், 22 ஆம் திகதியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் கிளினிக்குகளில் சிகிச்சை பெற்ற கல்வயல் மற்றும் சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாரின் நலன்கருதி சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நடைபெறும் கிளினிக்கில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலையத்தில் கடந்த மார்ச் மாதம் கிளினிக் நடைபெற்றபோது, மழை பெய்தமையால் கிளினிக் நடைபெறும் மண்டபம் பாதிப்பை எதிர்கொண்டது. மக்களின் நலன்கருதி மண்டபத்தைப் புனரமைத்து தருமாறு சுகாதாரப் பகுதியினரால் கோரப்பட்டது.

புலம்பெயர் நாட்டில் உள்ளவரின் நிதிப்பங்களிப்பில் மண்டப புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் மண்டபத்தில் கிளினிக் நடாத்த மாதாந்த வாடகை வழங்க வேண்டுமென நிர்வாகத்தினர் சுகாதாரப் பகுதியினருக்கு அறிவித்திருந்தனர்.

மக்களுக்கு இலவச சேவை வழங்கும் மண்டபத்துக்கு வாடகை வழங்க அரசு முன்வராததால், வேறு இடத்தில் கிளினிக் நடத்த பொருத்தமான இடத்தைத் தேடி வந்தனர்.

அதுவரை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கிளினிக் நடாத்தப்பட்டு வந்தன. இதனையறிந்த மட்டுவில் தெற்கில் உள்ள பண்டிதர் சிவலிங்கம் இலவச மருத்துவ சேவை நிலையத்தினர் தாமாகவே முன்வந்து மாதத்தில் இருநாள்கள் தாய் சேய் கிளினிக் நடாத்த அனுமதி வழங்கியுள்ளனர்.

இதேவேளை சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 7 குடும்ப நல சேவையாளர்கள் கடமையாற்றுகின்றபோதிலும் நிரந்தர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் இல்லை. இந்த வருடம் இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க நிதி கிடைக்கும் வாய்ப்பு உள்ள போதிலும், கட்டடம் அமைக்கக் காணி இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(க9)

## கொள்ளையரால் சங்கிலி அறுப்பு

கொழும்பு, ஜூன் 2

வீட்டினுள் புகுந்த கொள்ளையர் பெண்ணை கத்திமுனையில் அச்சுறுத்தி தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார்

அந்த நபர் தன்னை நிர்வாணமாக புகைப்படம் எடுத்தனர் என்றும் அந்தப் பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் எத்திமலை, கொட்டியாகல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

வீட்டிற்குள் நுழைந்த நபர் கத்திமுனையில் அச்சுறுத்தி தங்கச் சங்கிலியை அபகரித்ததுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கினால் நிர்வாணமாக எடுத்த புகைப்படத்தை பேஸ்புக்கில் பதிவிடுவதாகவும் கூறிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளார். என்று குறித்த பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.(ஐ)

## சுற்றிவளைப்பில் அறுவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 2

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு உழவனூர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளையில் சந்தேகநபர் அறுவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 100 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை அனுமதிப்பத்திரத்திரத்துக்கு முரணான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சசாட்டில் 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் தருமபுரம் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (க-113,214)

## சிசுவின் தலை மீட்பு!

கொழும்பு, ஜூலை 2

பிறந்து ஓரிரு நாள்களேயான சிசுவின் தலைப் பகுதி வீதியில் கிடந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது. பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கமைய வத்தளை திக்கோவிட்ட, அவரகொட்டுவ வத்த பிரதேசத்திலேயே சிசுவின் தலையை பொலிஸார் மீட்டுள்ளனர். சிசுவின் தாய் யார் என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(எ-ரி1)

## மத்திய வங்கியின் முறி மோசடி ரணில் இன்று வாக்குமூலம்?

கொழும்பு, ஜூலை 2

மத்திய வங்கியின் முறிமோசடி தொடர்பில் வாக்குமூலம் வழங்க முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றப்புலனாய்வுத்துறைக்கு இன்று செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருங்கிய தரப்புகள் இதனைத் தெரிவித்தன என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கி முறிவிற்பனை மோசடி தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமரின் முன்னாள் ஆலோசகர் எஸ்.பாஸ்கரலிங்கம் ஆகியோரிடம் வாக்குமூலம் பெறுமாறு சட்டமா அதிபர் பணித்திருந்தது. கடந்த ஜூன் 29ஆம் திகதி வாக்குமூலம் வழங்கவருமாறு அழைக்கப்பட்டபோதும் ரணில் விக்கிரமசிங்க அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜூலை 3ஆம் திகதி வாக்குமூலம் வழங்கப்படும் என்று ரணில் தரப்பில் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (எ-ரி1)

## வவுனியாவில் மொட்டுடன் இணைந்துகொண்ட 256 பேர்

வவுனியா, ஜூலை 2

வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியில் பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடும் ஜனக்க நந்தகுமாரவுடன் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் சிங்கள சுயேட்சைக் குழுக்களிலிருந்து அதன் பிரதிநிதிகள் உட்பட 256 பேர் தமது ஆதரவை வழங்கியமையுடன் அந்தக் கட்சியின் உறுப்புரிமைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வேட்பாளர் ஜனக்க நந்த குமார தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோர் கடந்த 10 மாதங்களுக்கு முன்னரே இந்த வன்னி மாவட்டத்துக்கான பொறுப்பை என்னிடம் தந்துள்ளனர். இங்குள்ளவர்களின் பிரச்சினைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படவில்லை. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்று வலுவுள்ளோரின் பிரச்சினைகளை விரைவில் தீர்த்துவைப்பேன். தற்போது எமது நாட்டில் ஜனாதிபதியாக இருப்பவர் அறிவான புத்திசாலியான ஒரு மனிதர். அவர் இந்த நாட்டை விரும்பி நேசிக்கக்கூடிய ஒருவர். இந்தநாட்டை வழிநடத்தி முன்னெடுக்கக்கூடிய ஒருவர். என்னுடைய ஒரு விருப்பம் எனது பிள்ளைகள் வாழ்கின்றமைபோல் இங்குள்ள பிள்ளைகளும் வாழவேண்டும் . என்றார். (ப-110)

## குவைத்தில் சட்டவிரோத மது உற்பத்தி நிலையம் முற்றுகை

குவைத், ஜூலை 2

குவைத் நாட்டில் இலங்கையர்களால் நடத்தப்பட்ட சட்ட விரோத மதுபான உற்பத்தி நிலையம் ஒன்று அந்த நாட்டுப் பாதுகாப்பு பிரிவினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பிரிவு தகவலுக்கமைய குவைத் சல்வா பகுதியில் இரவுக் கடமையில் ஈடுபட்ட பாதுகாப்பு அதிகாரி, நபர் ஒருவர் பை ஒன்றைக் கொண்டு செல்வதை அவதானித்ததை அடுத்து, அந்த் நபர் பையை வீசிவிட்டு கட்டடம் ஒன்றுக்குள் ஓடியுள்ளார். பாதுகாப்பு அதிகாரிகள் அந்தக் கட்டடத்துக்குள் நுழைந்து மேற்கொண்ட சோதனையில் சட்ட விரோத மதுபானம் தயாரிக்கும் 39 பெரல்களும், அதைக் காய்ச்சுவதற்கு பயன்படுத்தும் பொருள்களையும் மீட்டுள்ளனர். அங்கிருந்த இலங்கையர்களும் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-ரி1)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடக்கின் பாதுகாப்பும் இராணுவ முகாம்களும்

வடபகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களில் ஒன்றைக்கூட அகற்றவோ குறைக்கவோ போவதில்லை எனவும் தாம் ஜனாதிபதியின் கட்டளைக்கமையவே செயற்பட்டு வருகிறார் எனவும் அரசியல்வாதிகளின் வலியுறுத்தல்களை ஏற்றுச் செயற்படப் போவதில்லை எனவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்திருக்கின்றார். மேலும் அவர் வடமாகாணத்தில் கடல் வழியாக போதைப்பொருள்கள் கடத்தப்பட்டு வருகின்றன என்றும் வாள்வெட்டுக்குழுக்களின் அடாவடிகள் தலைவிரித்தாடுகின்றன என்றும் இப்படியான சட்டவிரோத நடவடிக்கைகளை படையினர் பொலிஸாருடன் சேர்ந்து தாம் தடுத்து வருகிறார்கள் என்றும் தெரிவித்திருந்தார்.

வடபகுதிக் கடலூடாக கேரளக் கஞ்சா கடத்தப்பட்டுக் கொண்டுவரப்பட்ட சம்பவங்கள் சில இடம்பெற்றமை உண்மைதான். ஆனால் இதுவரை ஹெரோய்ன் போன்ற சர்வதேசப் போதை வர்த்தகத்துடன் தொடர்புடைய போதைப்பொருள்கள் எதுவும் வடபகுதியூடாகக் கடத்தப்பட்டன எனத் தகவல் இல்லை. கேரளக் கஞ்சாக் கடத்தல் கூட தென்பகுதியைச் சேர்ந்த போதை வர்த்தக மன்னர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையுடன் வடபகுதியைச் சேர்ந்த சிலர் படகோட்டிகள், உதவியாளர்கள் போன்று செயற்பட்டுள்ளனர் என்ற விடயமும் வெளிப்பட்டுள்ளது.

அதாவது வடபகுதியில் இடம்பெறும் ஒன்றிரண்டு கஞ்சா கடத்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கையின் மூல மையங்கள் தென்பகுதியிலேயே செயற்பட்டு வருகின்றன.

எனவே வடபகுதிக் கடலூடாக இடம்பெறும் கடத்தலைத் தடுப்பதற்காகவே ஏராளமான இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் அவை அகற்றப்படமாட்டா எனவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கூறுகின்றமை எவ்வளவு தூரம் உண்மையை விட்டு வெகு தொலைவிலேயே உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வைக்கிறது.

வடக்கில் மதூஷ், கஞ்சிப்பான இம்ரான் போன்ற சர்வதேச கடத்தல் வலைப்பின்னலுடன் சம்பந்தப்பட்ட போதை வர்த்தக மன்னர்கள் எவரும் இல்லை. போதை வர்த்தகம் தொடர்பான கடத்தல்களும் மனிதப் படுகொலைகளும் தலைநகரம் உட்பட தென்பகுதியில் சர்வசாதாரணமாக இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு பொலிஸ் உப பரிசோதகர் உட்பட 5 பொலிஸார் டுபாயில் உள்ள கிஹான் பொன்சேகா என்பவரின் 100கோடி பெறுமதியான ஹெரோய்னை திருடியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 3 கோடி ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வேறு பல பொலிஸ் உயரதிகாரிகளும் கைது செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கொழும்பு உட்பட தென்பகுதியில் போதை வஸ்து வர்த்தக வலைப்பின்னல் பரந்தும் வலிமைப்பட்டும் உள்ள நிலையில் வடபகுதியில் அவர்களால் மேற்கொள்ளப்படும் ஒன்றிரண்டு சம்பவங்களைச் சாட்டி வடக்கில் படைமுகாம்களைப் பலப்படுத்துவதன் நோக்கம் நிச்சயம் போதைவஸ்து தடுப்பாக இருக்காது.

கொழும்பைச் சுற்றிய பகுதிகளில் பாதாள உலகக் குழுக்களினால் பட்டப் பகலில் பகிரங்க இடங்களில் படுகொலைகள் இடம்பெற்று வருகின்றமை சாதாரண விடயமாகிவிட்டது. அண்மையில் கூட சிறையில் உள்ள ஒருவனின் வழிகாட்டலில் செயற்படும் அவனது குழுவிடமிருந்து 12 துப்பாக்கிகள் ஹோமகமவில் கைப்பற்றப்பட்டுள்ளன.

இப்படியான நிலையில் வடக்கில் இதுவரை ஓரிரு கொலைகள் புரிந்த வாள்வெட்டுக் குழுவினரைக் கட்டுப்படுத்தவே இங்கு ஏராளம் படைமுகாம்கள் என்பதை நம்பமுடியுமா? அரச தரப்பினரும் அரச படைத் தரப்பும் எதைச் சொன்னாலும் அடிப்படையில் வடக்கு, கிழக்கை என்றும் இராணுவமயப்படுத்தி வைத்திருக்கும் நிகழ்ச்சிநிரல் என்பதே இத்தகைய நடவடிக்கைகளின் உண்மையான நோக்கமாகும்.

# பயணக் கட்டுப்பாட்டை நீக்கியது ஐ.ஒன்றியம்!

**கொழும்பு,ஜூலை 2**

**ஆரம்பக் கட்டமாக இலங்கை உள்ளடங்காத 15 இற்கும் குறைவான நாடுகளுக்கு தனது வெளியக எல்லைகளை மீண்டும் திறப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது என்று வெளிநாட்டு உறவுகள் அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது விமான நிலையங்களைத் திறக்காத அல்லது ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியத்திலிருந்து பயணிகளை ஏற்றுக்கொள்ளாத நாடுகள் இன்னும் பரிசீலிக்கப்படவில்லை.

இந்தப் பட்டியலில் இலங்கையையும் உள்ளடக்குவதற்காக தீவிரமாக முயற்சித்து வரும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அங்கீகாரம் பெற்றுள்ள பிரஸ்ஸல்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு ஐரோப்பிய ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடுகளிலுள்ள தொற்றுநோய் சார்ந்த சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், பயணத்தின் போதான கட்டுப்பாட்டு நடவடிக்கை களைப் பயன்படுத்துவதற்கான திறன் மற்றும் அந்த நாடு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான பயணக் கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளதா இல்லையா என்பதைப் பொறுத்து பட்டியல் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்படும் என்று தூதரகத்துக்குத் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

(க)

## தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கிய 4 பேருக்கு மலேரியா!

மாத்தளை, ஜூலை 2



மாத்தளை, பெல்வெஹர தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருந்த நால்வருக்கு மலேரியா நோய் ஏற்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்கள் ஆபிரிக்க நாடுகளிலிருந்து இலங்கை திரும்பியவர்கள் என்று மலேரியா ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நுளம்புகள் தொடர்பான விசேட நிபுணர் குழுவொன்றும், சுகாதார அதிகாரிகள் குழுவொன்றும் குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்தின் சுற்றுப்புறத்தில் நுளம்பு பெருக்கம் தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பி, இங்குள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கியுள்ள நபர்களுக்கு மலேரியா நோய் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க மலேரியா ஒழிப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவர்கள் தமது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து வீடு திரும்பியதன் பின்னர் பிரதேச மலேரியா ஒழிப்பு அதிகாரிகளின் ஊடாக நோய் நிலைமை தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். இதேவேளை, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியினுள் 16 மலேரியா நோயாளிகள் பதிவாகியுள்ளனர். கடந்த வருடத்தில் 53 மலேரியா நோயாளிகள் மாத்திரமே பதிவாகியிருந்தனர் - என்றார்.

(ஐ)

## சிகிரியா குகை திறக்கப்பட்டது

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சுமார் மூன்று மாதங்களாக மூடப்பட்டிருந்த சிகிரியா குகை நேற்றுக் காலை மீண்டும் திறக்கப்பட்டது.

மத்திய கலாசார நிதியத்தின் கீழ் வரும் சிகிரியா, கடுமையான சுகாதார நெறிமுறையின் கீழ் திறக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளே நேற்று அங்கு வருகைதந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை தொல்பொருள் மற்றும் புராதன ஆராய்ச்சி உள்ளிட்ட தேசிய அருங்காட்சிசாலைகள் அனைத்தும் நேற்றுத் தொடக்கம் மீண்டும் திறக்கப்பட்டன.

(க)

## 107 நாள்களின் பின்னர் கசூரினா திறப்பு

காரைநகர், ஜூலை 2

வடக்கில் பிரசித்திபெற்ற கசூரினா சுற்றுலா மையம் 107 நாள்களின் பின்னர் மீளத் திறக்கப்பட்டுள்ளது என்று காரைநகர் பிரதேச சபை தவிசாளர் வி . கேதீஸ்வரதாஸ் தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலுக்கு அமைய கசூரினா கடற்கரை சுற்றுலா மையம் உரிய தனிநபர் இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மீண்டும் நேற்று புதன்கிழமை முதல் திறக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் நன்மை மற்றும் பிரதேச சபையின் தூர நோக்கம் கருதி மையம் திறக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கசூரினா சுற்றுலா மையம் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அங்கு சிறுவர் விளையாட்டு திடலுடன் கூடிய பூங்கா, கடைகள், உணவகங்கள், குளியலறைகள், உடுபுடவைகள் மற்றும் நவீன வசதி கொண்ட பாரம்பரிய, சைவ, அசைவ உணவளிக்கக்கூடிய ஹோட்டல் என்பவற்றை உள்ளடக்கியதான வசதிகளுடன் வசதிகள் கொண்ட பொதுநோக்கு மண்டபம் உள்ளிட்டவற்றை சுற்றுலாப் பயணிகள் முழுமையாகப் பயன்படுத்தலாம்.

எனவே சுற்றுலா மையத்துக்கு வருகை தருவோர் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படாத வகையில் நடந்து கொள்ளவேண்டும் எனத் தவிசாளர் வி. கேதீஸ்வரதாஸ் கேட்டுள்ளார்.

(க-50)



### மைத்திரியின் பாதுகாப்புப் பிரிவினர்

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எதுவும் தெரிந்திருக்கவில்லை

### ஏ.எஸ்.பியான எஸ்.ஜி. சதரசிங்க சாட்சியம்

கொழும்பு, ஜூலை 2

**உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்புப் பிரிவு அறிந்திருக்கவில்லை என ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி.) எஸ்.ஜி.சதரசிங்க சாட்சியமளித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் சாட்சி விசாரணைகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் இடம்பெற்று வருகின்றன. இதன் போது ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் பணியாற்றிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஜி. சதரசிங்க மேற்படி விடயங்களை வெளிப்படுத்தினார்.

தொடர்ந்து சாட்சியமளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது: 'ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பிரதானி, அரச உளவுச் சேவையின் அதிகாரிகள் உள்ளிட்டோருடன் மாதாந்தச் சந்திப்புகளை நடத்திய பின்னர் பாதுகாப்பு குறித்த மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படும். வழக்கமாக ஜனாதிபதியின் நிகழ்காலப் பாதுகாப்பு குறித்த அறிக்கை யைப் பெறும் நாங்கள், அதன் பின் னர் ஜனாதிபதி விசேடமாக கலந்து கொள்ள உள்ள கூட்டங்கள், நிகழ்வுகள் குறித்து அவதானம் செலுத்தி பாதுகாப்பு மதிப்பீட்டை முன்னெடுப்போம்' எனத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய 125 பேர் இருக்கின்றனர் என அரச உளவுச் சேவையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் நாணயக்கார, கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதியன்று இடம்பெற்ற ஜனாதிபதியின் பாதுகாப்பு குறித்த மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)





## யாழ். பல்கலைக்கழகத்தின் விடுதிகளில் தொற்றுநீக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிகளில் நேற்றுமுன்தினம் தொற்றுநீக்கல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இராணுவத்தினர், பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கொரோனாப் பெருந்தொற்றால் மூடப்பட்ட பல்கலைக் கழகங்களை மீண்டும் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்து பல்கலைக் கழகங்களில் துப்புரவுப் பணிகளும் தொற்றுநீக்கல் பணிகளும் முன்னெடுக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொற்றுநீக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-111)

## பாடசாலைகளில் தொற்று நீக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலைகளில் தொற்று நீக்கம் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் உதவியுடன் இந்த தொற்று நீக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலை சுற்றாடல் மற்றும் வகுப்பறைகள் யாவும் மருந்து விசிறப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த வாரத்திலும் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட மேலும் சில பாடசாலைகளில் இவ்வாறு மருந்து விசிறப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்படும். (ம-17)



## சென். பற்றிக்ஸ் கல்லூரியில் தொற்று நீக்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை தொற்றுநீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனாப் பெருந்தொற்றின் பின்னர் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அங்கு தொற்றுநீக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் தொற்றுநீக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ம)



## உடுப்பிட்டி அ.மி. கல்லூரியின் ஆசிரியர்களால் துப்புரவுப் பணி

யாழ்ப்பாணம், ஜூலை 2

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஆசிரியர்களால் கல்லூரி வளாகம் நேற்று முன்தினம் துப்புரவாக்கப்பட்டது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக முடக்கப்பட்டிருந்த பாடசாலைகள் நேற்றுமுன்தினம் மீண்டும் திறக்கப்பட்டன. மாணவர்கள் அல்லாமல் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தயார்ப்படுத்தல் செயற்பாட்டுக்காகவே பாடசாலைகள் திறக்கப்பட்டன. இந்த நிலையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஆசிரியர்களால் கல்லூரி வளாகம் நேற்றுத் துப்புரவாக்கப்பட்டது. (ம-108)

## மருத்துவமனை வீதியிலுள்ள வடிகான்களில் துப்புரவுப்பணி

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். நகரில் மருத்துவமனை வீதியில் உள்ள வடிகான்களை துப்புரவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர ஆணையாளர் த.ஜெயசீலனின் நெறிப்படுத்தலின் கீழ் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாநகர கழிவகற்றும் தொழிலாளர்கள் இந்தத் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர்.


மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லி வீதி உட்பட மற்றும் நகரில் உள்ள வடிகான்கள் பல துப்புரவாக்கப்பட்டுள்ளன. முன்னதாக குருநகர் பகுதியில் உள்ள பல வடிகான்கள் துப்புரவாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## பிரதமரைச் சந்தித்தார் மாலைதீவுத் தூதுவர்

கொழும்பு, ஜூலை 2

பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவுக்கும் மாலைதீவுத் தூதுவர் ஓமார் அப்துல் ரசாக்குக்கும் இடையில் சிறப்புச் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. அலரிமாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கொரோனாப் பெருந்தெற்றின் காரணமாக மாலைதீவின் எல்லைகள் பூட்டப்பட்டிருந்த நிலையில், ஜூலை மாதம் 15ஆம் திகதி அந்த நாடு எல்லைகளைத் திறக்கவுள்ளது. இந்த நிலையில், மாலைதீவில் ஹோட்டல் துறையில் தொழில்புரிந்த இலங்கைப் பணியாளர்கள் வழமையைப்போன்று தமது பணியில் ஈடுபட வாய்ப்புக் கிடைக்கும் எனத் தூதுவர் பிரதமரிடம் அறிவித்துள்ளார். (ம)




இன்று
20 ஆவது
அகவையில்
கடந்த
19
ஆண்டுகளில்
திடமான
காலடிகளை
எடுத்து வைக்கும்
நாம்,
இவ்வேளையில்
வடக்கின்
தனிப்பெரும்
அச்சகதாரர்களாக
எம்மை
வளர்த்தெடுக்க
உதவிய
பணியாளர்கள்,
வாடிக்கையாளர்கள்,
நலன் விரும்பிகள்
அனைவருக்கும்
எம்
நெஞ்சம் நிறைந்த
நன்றிகளைக்
காணிக்கை
ஆக்குகிறோம்.
எமது கலைக்களஞ்சியமான
அச்சகப் பாசறையில்
அச்சு ஊடக வல்லுநர்களாக
பயிற்றுவிக்கப்பட்ட
நம் பணியாளர்களே
இன்று வடக்கின்
அச்சு ஊடகங்கள் தோறும்
பணியாற்றுவது மட்டுமன்றி,
புதிய அச்சு ஊடகங்களையும்
உருவாக்கியுள்ளார்கள்
என்பதையிட்டு பெருமகிழ்வுறும்
நாம் தொடர்ந்தும் சர்வதேச
பயிற்றுவிப்பாளர்களால்
அச்சகப் பணியாளர்களின்
தொழில்திறனை விருத்தி செய்து
சர்வதேச ரீதியில்
தடம் பதித்து அச்சுக் கலையை
வளர்த்தெடுத்துள்ளோம்.
2020
புதிய
தசாப்தத்தில்
நெறியாள்கை
தொழில்நுட்பம்
பரிணாமம்
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

# போதைப்பொருள் தடுப்பு பிரதானியாக அபோன்சு!

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு நியமித்தது

கொழும்பு, ஜூலை 2

பி.என்.பீ. எனப்படும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பிரதானியாக பிரதி பொலிஸ்மா அதிபர் ஜி.கே. ஜி.அபோன்சு நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வாய்மொழி மூல அனுமதியின் பிரகாரம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பிரதானியாக செயற்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ மெதவத்தவை பொலிஸ் நலன்புரிப் பிரிவுக்கு இடமாற்றம் செய்ய பதில் பொலிஸ்மா அதிபர் முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள நிலையிலேயே, புதிய பிரதானிக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலர் என்.ஏ.வீரசிங்க குறிப்பிட்டார். நியமனம் மற்றும் இடமாற்றம் ஆகிய இரண்டும் வாய்மொழி மூலமான அனுமதியின் பிரகாரம் வழங்கப்பட்டதாகவும், இது தொடர்பான எழுத்து மூல அனுமதி நாளையதினம் ஆணைக்குழு கூடிய பின்னர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)



## பாடசாலைகளின் சுகாதார குழுவினருக்கு கருத்தமர்வு

சாவகச்சேரி, ஜூலை 2

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் சுகாதாரக் குழு உறுப்பினர்களுக்கு, பாடசாலைகள் திறக்கப்படும் வேளையில் மேற்கொள்ள வேண்டிய சுகாதார விதிமுறைகள் தொடர்பான கருத்தமர்வு தென்மராட்சி வலயக் கல்விப் பணியகக் கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற கருத்தமர்வில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார், பொதுச் சுகாதார பரிசோதகர்களான ம.பிரபாகரன், பி.தனிர்ராஜ் ஆகியோர் கருத்துரையாற்றினர். இன்று வியாழக்கிழமை மற்றொரு பிரிவினருக்குக் கருத்தமர்வு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-9)

## பாலஸ்தாபன கிரியைகள்

சாவகச்சேரி, ஜூலை 2

சாவகச்சேரி கச்சாய் வீதி கோயிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் கோவில் கும்பாபிஷேகத்துக்கான திருப்பணி வேலைகள் மேற்கொள்வதற்கான பாலஸ்தாபன கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். (சு-9)

## தென்மராட்சி பாடசாலைகளிலும் கிருமி நீக்கம்

சாவகச்சேரி, ஜூலை 2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் படையினர் கிருமித் தொற்று நீக்கி மருந்து விசிறும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் 6 ஆம் திகதி பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தருவதால், அருகில் உள்ள படைமுகாம்களில் உதவி கோரப்பட்டுள்ளது.

அதனையடுத்து உள்ளூராட்சி சபைகளின் பங்களிப்புடன் படையினர். கிருமித்தொற்று நீக்கி மருந்து விசிறி வருகின்றனர். (சு)

## தென்னிலங்கை நபருக்கு மறியல்

சாவகச்சேரி, ஜூலை 2

உயிராபத்தை ஏற்படுத்தும் கூரிய ஆயுதத்தை மறைத்து வைத்திருந்த தென்னிலங்கை வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று புதன்கிழமை உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நாவற்குழிக்கு விரைந்த பொலிஸார், அங்கு கூரிய ஆயுதம் வைத்திருந்த நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (சு-9)



## 28 கிராமங்களுக்கு மருத்துவ நிலையம்

மானிப்பாய், ஜூலை 2

வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கட்டுடையில் 28 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்குச் சேவைசெய்யும்நோக்கில் மருத்துவ நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

உளவள சிகிச்சைப்பிரிவு, உளவளத்துணைப்பிரிவு, மருத்துவப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாக நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனையின் முன்னாள் மருத்துவ தாதிய உத்தியோகத்தர் எஸ். மைக்கலால் நிலையம் திறக்கப்பட்டது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை வடக்கு முகாமையாளர், யாழ் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப்பிரிவின் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் மற்றும் மருத்துவர் பாரதிதாசன் உள்ளிட்டவர்கள் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர். (சு-50)

*சட்டவிரோத மின் பாவனை:*

## 5 கோடியே 90 லட்சம் 1,937 பேரிடம் தண்டம்

கொழும்பு, ஜூலை 2

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றுக் கொண்ட ஆயிரத்து 937 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு 5கோடியே 90 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் மே மாதம் தொடக்கம் இந்த வருடம் மே மாதம் வரை இவ்வாறு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுள்ளனர் என்றும் மின்சார சபைக்கு 100 மில்லியன் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மின்சக்தி துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (த)



நெடுங்கேணி கூழாங்குள வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகிறது. கொரோனா வைரஸ் காரணமாக அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டிருந்த நிலையில், தற்போது மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (சு)

## ஆயுதங்களுடன் சென்று பணம், நகை கொள்ளை

கொழும்பு, ஜூலை 2

இங்கிரிய படுகம்பல தெற்கு ஹதபொன்கொட பகுதியில் வர்த்தக நிலையத்துக்கு ஆயுதங்களுடன் சென்ற இருவர் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று இரவு முழுமையாக மறைத்த முகக்கவசம் அணிந்து வர்த்தக நிலையத்துக்குள் நுழைந்து துப்பாக்கியால் அச்சுறுத்தி 20 ஆயிரம் ரூபா பணத்தொகை மற்றும் இரு தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த)

## குளவி கொட்டி 9 பேர் பாதிப்பு

ஹற்றன், ஜூலை 2

குளவிக்கொட்டுக்கு இலக்காகி தோட்டத்தொழிலாளர்கள் 9 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அக்கரப்பத்தனை ஹூட்வில் தோட்டப்பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்னர் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தபோது இவ்வாறு குளவிகொட்டுக்கு இலக்கானார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதில் 8 பெண்களும், ஓர் ஆணுமாக 9 தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மன்றாசி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# கொரோனாவுடன் முஸ்லிம்கள் தொடர்புபடுத்தப்படும் அவலம்

## *மனித உரிமைகள் ஆணையாளர் கவலை*

**கொழும்பு, ஜூலை 2**

**பல நாடுகளில், சிறுபான்மை சமூகங்களின் உறுப்பினர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் பெரும் எதிர்ப்பை எதிர்கொள்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில், அதிகாரத்தில் இருப்பவர்கள்கூட விதிவிலக்காவதில்லை. இலங்கையிலும், இந்தியாவிலும், முஸ்லிம் சமூகத்தின் மீதான வெறுப்புணர்வால் கோவிட்19 உடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார்கள்.**

இவ்வாறு மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பச்லெட் தெரிவித்துள்ளார்.


மனித உரிமைகள் சபையின் 44 ஆவது கூட்டத் தொடரின் ஆரம்ப உரையில், மனித உரிமைகள் மற்றும் கொவிட் - 19 தொற்றுநோயின் தாக்கம் தொடர்பாக உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் இலங்கையில் முஸ்லிம் சமூகத்தினர் குறிவைக்கப்படுவது தொடர்பாகத் தனது பார்வையை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பல்கேரியாவில், ரோமா மக்கள் பொதுச் சுகாதார அச்சுறுத்தலாக அவமதிக்கப்பட்டுள்ளனர். சில உள்ளூர் அதிகாரிகள் ரோமா குடியேற்றங்களைச் சுற்றி சோதனைச் சாவடிகளை அமைத்து தனிமைப்படுத்தல்களை செயல்படுத்துகின்றனர். பாகிஸ்தானில், சிறுபான்மையினருக்கு எதிரான வெறுக்கத்தக்க பேச்சு கடுமையானதாகவே உள்ளது.

கொவிட்19 ஆல் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கருதப்படும் மக்களுக்கு எதிரான களங்கம் மற்றும் அச்சுறுத்தல்கள் ஹைட்டி, ஈராக் மற்றும் பல நாடுகளிலும் பதிவாகியுள்ளன.

ஐரோப்பிய ஆணையத்தின் முன்மொழிவு, பொதுச் சுகாதாரம் மற்றும் சமூகபொருளாதார ஆதரவோடு புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான நடவடிக்கைகள் மூலமாக யாரையும் பின்வாங்கவிடாமல் செய்வது, சிறந்த தலைமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

சில நாடுகளில், தொற்றுநோயால் தூண்டப்பட்ட மந்தநிலை, மனித உரிமை மீறல்கள் பெரும்பாலும் பதிவாகும் துறைகள் உட்பட பல துறைகளில் ஏற்கனவே தொழில் விதிமுறைகளைத் தளர்த்துவதற்கான அழைப்புகளுக்கு வழிவகுக்கிறது. அத்தகைய அழைப்புகளை எதிர்க்க வேண்டும்- என்றார். (எ)



# மின் கம்பத்தில் ஏறி பெண் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 2

பெண் ஒருவர் மின் கம்பத்தில் ஏறி போராட்டம் நடத்தியுள்ளார். கம்புறுபிட்டிய நகரில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அவர் மின்சார கம்பத்தில் ஏறி ஒரு மணி நேரம் வரையில் இருந்த நிலையில் நீண்ட நேர முயற்சியின் பின்னர் அந்தப் பகுதி மக்களும், பொலிஸ் அதிகாரிகளும் இணைந்து அவரை மின் கம்பத்திலிருந்து கீழே இறக்கியுள்ளனர். குடும்பத் தகராறு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போது அந்தப் பெண் கம்புறுபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி1)

# மகளைக் கொலைசெய்து தாயும் உயிர்விட முயற்சி

## *லண்டனில் சம்பவம்*

லண்டன், ஜூலை 2

லண்டனில் இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது மகளை கொலைசெய்ததுடன், தானும் உயிரைவிட முயன்றுள்ளார். தாய் தற்போது ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மன அழுத்தம் காரணமாக இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்பட்டாலும், உரிய காரணம் இதுவரையில் வெளியாகவில்லை. 4 வயது நிரம்பிய சாயகி என்னும் சிறுமியே இவ்வாறு தாயால் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி1)

# தம்புள்ளை எலும்புக்கூடுகள்: மூவர் கைது!

**தம்புள்ளை, ஜூலை 2**

தம்புள்ளையில் அண்மையில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மொரகாஹேனமில்லெவ பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரின் மனைவியுடன் தொடர்பை பேணிவந்த நபரே அவரைக் கொலை செய்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று மாத்தளை குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரும், அவருக்கு ஒத்தாசை வழங்கிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கொக்கரெல்ல , மாபிடிகம மற்றும் ஓப்பநாயக்க ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 21 - 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும், சந்தேக நபர்கள் கொலைக்காக பயன்படுத்திய டிப்பர் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல எரேவுல்ல பகுதியில் கடந்த மாதம் 18 ஆம் திகதி விவசாயத்துக்காக நீர் சேமித்துவைக்கும் ஐந்து அடி ஆழமான கிணறு ஒன்றில் டயர் இட்டு எரிக்கப்பட்ட நிலையில் மனித எலும்புகள் மீட்கப்பட்டிருந்தன. (எ-ரி1)

# தேர்தல் பரப்புரை செய்ய திரையரங்குகளில் தடை!

கொழும்பு, ஜூலை 2

அரசியல் கட்சி மற்றும் வேட்பாளர்களின் பரப்புரை விளம்பரங்களுக்காக திரைப்படங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தேசிய திரைப்பட கூட்டுத் தாபனத்துக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் பொலிஸ் தலைமையகத்துக்கும் அறிவித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

திரையரங்குகளில் திரைப்பட ஆரம்பத்தின் போது அல்லது திரைப்படத்திற்கு இடையில் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களின் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படுதல் தேர்தல் குற்றம் என்பதால் இது தொடர்பில் நாட்டின் அனைத்து திரையரங்க உரிமையாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரையரங்குகளில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என்பது தொடர்பில் கண்காணிக்க நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார். (எ-ரி1)

# கட்டாரில் சிக்கிய 264 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூலை 2

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கட்டார் நாட்டில் சிக்கித்தவித்த 264 இலங்கையர்கள் நாடு திரும்பினர். டோஹாவிலிருந்து ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான சிறப்பு விமானம் மூலம் இவர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டனர். தொழில் நிமித்தம் கட்டாருக்கு சென்று சிக்கிக் கொண்டவர்களே இவ் வாறு நேற்று காலை நாட்டை வந்தடைந்தனர். இவர்கள் பி.சி. ஆர். பரிசோதனைகளின் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முல்லையிலுள்ள 463 பேர் புத்தளத்தில் வாக்களிப்பர்

## முல்லை.உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 2

ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான காரணங்களுக்காகத் தமது சொந்த வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியாத 463 பேர் புத்தளத்தில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நாட்டில் இடம்பெற இருக்கின்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது முழுமையாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆயிரத்து 508 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை மேற்கொண்டிருந்த நிலையில் 127 பேருடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 3 ஆயிரத்து 381 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தமுறை முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 ஆயிரத்து 360 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். 136 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இம்முறை முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் வாக்கு என்னும் பணிகளுக்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

அதேவேளை இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான காரணங்களுக்காக தமது சொந்த வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியாத 463 பேரே புத்தளத்தில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார். (ப-19)



## பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசிச்செய்தி



ஈழமணித் திருநாட்டில் வடபால் பன்னாலைப் பதியிலே மக்களின் துயர் துடைக்கும் பெருமானாகவும் வரத்தலம் கற்பகவிநாயகனாகவும் கிராமத்திற்கு மட்டுமல்லாமல் அகில உலகிற்கும் தனது அருளைப் பரப்பும் விநாயகனாகவும் திகழும் எம் பெருமானுக்கு ஆனித் திங்கள் 18ஆம் நாள் (02.07.2020) வியாழக்கிழமை அனுஷ நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையிலே கும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா நிகழவிருக்கின்றது.

எம் பெருமானின் ஆலயமானது கி.பி 18 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தோன்றிய மிகப் பழமை வாய்ந்த ஆலயமாக திகழ்கின்றது. ஆலயத்திலே. நித்திய. நைமித்திய கிரியைகள் தவறாது இடம்பெற்று வருகின்றது. ஆலய ஆதீனகர்த்தாக்களில் ஒருவராகிய மகேந்திரசர்மா அவர்கள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் வாக்கிற்கிணங்க. தன்னையே எம் பெருமானுக்காக அர்ப்பணித்து ஆலயத்தை சிறப்புற நடத்துவதில் மிகவும் வல்லமை படைத்தவர்.

விநாயகப் பெருமானின் அருளானது எங்கும் வியாபித்து எல்லா மக்களும் எம் பெருமானின் ஆசிகளைப் பெற வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

" சர்வே ஜனாகா சுகினோ பவந்து சமஸ்த சன் மாங்கலானி சந்து"

**பிரதிஷ்டா பிரதம குரு**
**சதாசிவசுகுமாரக் குருக்கள்.**

## வாழ்த்துரை

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் பன்னாலை என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நவகுண்ட பட்ச மகாகும்பாபிஷேகம் இவ்வருடம் 02.07.2020 ஆம் நாள் ஆனி மாதத்தில் நடைபெறவிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்ச சியடைகின்றோம்.

இவ்வாலயம் பல்வேறு ஐதிகங்களைக் கொண்டு வளம் பெற்று வந்துள்ளதை இவ்வாலய வரலாற்றிலிருந்து நாம் அறிய முடிகின்றது. கற்பக நாயகி என்ற அம்மையாரால் நீண்ட காலம் பூசித்து வழிபாடாற்றி வந்தமையால் எம் பெருமானுக்கு கற்பக விநாயகர் என்ற திருநாமம் ஏற்பட்டது என்பது வரலாறு இவ்வாலயத்தில் நிகழ்ந்த ஒரு தெய்விக நிகழ்ச்சியின் பயனாய் 'வறுத்தலம்' என்ற பெயர் ஏற்பட்டு நாளடைவில் 'வரத்தலம்' என்ற பெயர் மருவியதாகக் கூறப்படுகின்றது. எனவே விநாயகர் வரத்தலம் கற்பக விநாயகர் என்ற திருநாமத்தோடு திகழ்கின்றார். இவ்வாலயத்தின் ஆதீன கர்த்தர் பிரம்மஸ்ரீ ம. மகேந்திர சர்மா அவர்களாவர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக் வல்லான் விநாயகரே பிரணவப் பொருள் விநாயகரே முதன்மை வழிபாட்டிற் குரியவர் எக்காரியமும் இன்னலின்றி வெற்றிபெற அவரது திருவருளே துணைநிற்பதாகும் எனவே எமது பிரதேசத்தில் விநாயகருக்கு ஊர் தோறும் கோவிலமைத்து பக்தி பூர்வமாக மக்கள் வழிபாடாற்றி வருகின்றனர் . அவ்வரிசையில் வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயமும் சிறப்படைகின்றது.

இவ்வாலயத்தில் முதல் மகா கும்பாபிஷேகம் 1872 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது. தொடர்ந்து 1912 ஆம் ஆண்டிலும் 1956ஆம் ஆண்டிலும் 1977 ஆம் ஆண்டிலும் 2004 ஆம் ஆண்டிலும் ஐந்தாவது மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது விநாயகப் பெருமானின் ஆலயத்தில் பஞ்சதள இராஜகோபுரம் 43 அடி உயரத்தில் அமைக்கப்பெற்று பிரம்மஸ்ரீ ம. மகேந்திரசர்மாவின் தலைமையில் ஏனைய சிவாச்சாரியர்களது அனுசரணையுடன் 2014 ஆம் ஆண்டு குடமுழுக்கு வைபவம் நடைபெற்றுள்ளது.

கற்பக விநாயகப் பெருமான் மீது சைவப் பெரியார்கள் திருவூஞ்சல் இரட்டைமணிமாலை. திருப்பதிகம் விநாயகர் பரத்துவ மாலை போன்ற பாடல்கள் இயற்றி விநாயகப் பெருமானின் தெய்விகச் சிறப்பைப் போற்றியுள்ளனர்.

இன்றைய நிலையில் எவரும் எதிர்பார்த்திராத கொடிய தொற்று நோய்த் தாக்கத்தினால் பெரும்பாலான மக்கள் இன்னலும் துன்பமும் மிகுந்த சூழலில் இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றனர். அத்தகைய நோயை இல்லாதொழித்து இன்னல்களையும் துன்பங்களையும் நீக்கி அருளும் வகையில் எம் பெருமானுக்கு நிகழும் இம் மகாகும்பாபிஷேகத்தின் திருவருட் பேறு இவ்வூர்மக்களுக்கு இந்நாட்டினர்க்கும் முழு உலகுக்கும் கிடைத்து நலம் பெறவும் மீட்சி பெறவும் கற்பக விநாயகர் பாதுகாத்தருள்வராக எனப் பிரார்த்திப்போமாக !

திருப்பணிசெய் வார்க்குச் சிவனையுன்னிச் செம் பொன் விருப்புடன் வார் பெறுக வீடு என்ற சைவசமய நெறி கூறும் பிரமாணத்திற்கேற்ப திருப்பணிக் கைங்கர்யத்தில் ஈடுபட்டு எம் பெருமானின் தெய்விக சார்கித்தியம் இவ்வாலயத்தில் நிறைவாக மிளிர அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளமை எல்லோருக்கும் மனநிறைவையும் மன மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது.

இவ்வாலயத்தில் ஆதீன கர்த்தர். மெய்யன்பர்கள் அடியார்கள் சிற்பக் கலைஞர்கள் ஆகியோர் இன்றைய அசாதாரண சூழ்நிலையிலும் புனருத்தாரண திருப்பணிகளை ஆலயத்தில் நிறைவேற்றி மகா கும்பாபிஷேகத்தைக் காணும் பேறு பெற்றுள்ளமை அவரவர் செய்த தவப்பேறேயன்றி வேறில்லை.

மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நிறைவுபெற்று விநாயகப் பெருமானின் நித்திய நைமித்திய வழிபாடுகள் சிறப்புற தொடர்ந்து நடைபெற அடியார்கள் அனைவருக்கும் ஒற்றுமையுடன் செயற்பட கற்பக விநாயகரின் திருவருள் கிட்டுதாகும்.

மகாகும்பாபிஷேகம் எம் பெருமானுக்கு சிறப்புற நடைபெற பிரார்த்திக்கின்போமாக அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் ஆயுள் ஆரோக்கியம் ஐஸ்வரியம் பெற்று நீடூழி வாழவும் எம்பெருமானின் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம். இப் புனித நன்னாளில் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஸர்வே ஜனா சுகினோ பவந்து
லோகா சமஸ்தா அகினோ பவந்து
ஸர்வ மங்களாணி பவந்து

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி**
**பிரம்மஸ்ரீ. ம. கோபாலகிருஸ்ண ஐயர்**
**வாழ்நாள் பேராசிரியர்**

## தெல்லிப்பழை -
## வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய

விவசாயத்தில் தன்னிறைவுடைய விவசாயப் பின்புலத்தையும் சேர்பட்டம் பெற்றவர்களில் ஒருவராகிய சேர் கனகசபை போன்ற பல கல்விமான்களையும். கொண்டு விளங்கும் பன்னாலைக் கிராமத்தில் தலவிருட்சமாக வன்னி மர நிழலிலே வீற்றிருந்த விநாயகரை கையாலப்புலத்தில் (வரத்தலத்துக்கு வடக்கே) வசித்து வந்த கற்பக நாயகி அம்மையார் நீண்ட காலமாக வழிபாடு செய்து வந்திருக்கிறார் என்பது ஊரார் கதையாகப் பேசப்பட்டு வருகிறது.

### அமைவிடம்

இந்து சமுத்திரத்தின் முத்தெனப் புகழ்பெற்ற இலங்கை (ஸ்ரீலங்கா) வள நாட்டின் வட பகுதியாம் யாழ். மாவட்டத்தின் வலி. வடக்குப் பிரதேசத்தில் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து மேற்கே செல்லும் பண்டத்தரிப்பு வீதியில் அம்பனைச் சந்தியில் இருந்து மேற்கே சிறிது தூரத்தில் வீதியோரமுள்ள கிணற்றுக்கு வடமேற்கே செல்லும் பாதையில் இவ் ஆலயம் அமைந்துள்ளது.

### விநாயகர் பிரதிஷ்டை

சோழ வள நாட்டின் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி பிறப்பில் குதிரைமுகம் (குன்ம நோயினால் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது) கொண்டமையால் பல்வேறு சிகிச்சை முறைகளாலும் தீராதபோது சாந்தலிங்க சுவாமியின் வழிகாட்டலில் தெற்கே தலயாத்திரையும் தீர்த்த யாத்திரையும் மேற்கொண்டு தனது பிறவித்துன்பம் நீக்கும் பொருட்டு இலங்கையின் வடபால் குமாரத்தி பள்ளத்தில் வந்திறங்கி அங்கு வீற்றிருந்த முருகனை வணங்கிகுதிரை முகம் நீங்கப் பெற்றார். இதனாலேயே குமாரத்தி பள்ளமே மாவிட்ட (மா- குதிரை விட்ட) புரம் எனப் புகழ்பெறக் காரணமானது என்பது வரலாறு.

குதிரை முகம் மாறப்பெற்றும் குன்ம நோய் நீங்காத படியால் அங்கிருந்து புறப்பட்டு நகுலேஸ்வரம் (கீரிமலை) சென்று நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரப் பெருமானின் அருட்கடாட் சத்துடன் நகுலகிரி சங்கம சாகர நன்னீரில் தீர்த்தமாடி நோயின் ஒரு பகுதி நீங்கப்பெற்றார். பின்னர் தான் கண்ட கனவின் பயனாக பிள்ளையாரைத் தரிசனம் செய்யாமையை உணர்ந்த அவர் அதற்குப் பரிகாரம் தேடவே கீரிமலைக்கும் மாவிட்டபுரத்துக்கும் இடைக்கிராமமான கொல்லங்கலட்டியிலும். அதனைத் தொடர்ந்து பன்னாலை. அழகொல்லை. கும்பளாவளை. பெருமாள் கடவை. கல்வளை. ஆலங்குளாய் போன்ற இடங்களுக்கு நிலபாவாடை விரித்து பட்டத்து யானையில் சென்று பிள்ளையார் விக்கிரகங்களை நிறுவி வழிபாடாற்றி நோய் நீங்கப்பெற்றார் என்பது வரலாறு.

### பன்னாலையில் நிறுவப்பட்ட விநாயகருக்கு வரத்தலம் கற்பக விநாயகர் என்ற பெயர் வந்த வரலாறு

கற்பகநாயகி என்ற அம்மையாரால் பூசித்து வழிபாடாற்றி வந்தமையால் கற்பக விநாயகராகினார் எனவும் இந்த மூதாட்டி ஆவணிச் சதுர்த்தி அன்று பூசை செய்ய கோயிலடிக்குச் சென்ற போது பெருமழை கொட்டியதால் பயறு வறுத்து பொங்கல் மோதகம் செய்து படைத்து ஆவணிச் சதுரத்தி பூசை செய்ய இயலாமல் போகவே மனமுடைந்த மூதாட்டி வீடு சென்ற போது அங்கே வாசலில் ஒரு முதியவர் நின்றதாகவும் மழை ஓய்ந்ததும் கோயிலடி சென்று பார்த்த போது பயறு வறுத்து பொங்கல் மோதகம் படையல் ஆயத்தமாக இருந்ததாகவும் பின்னர் பூசை வழிபாடாற்றினார் எனவும் கூறப்படுவதால் பயறு வறுத்ததால் வந்த பெயரே வறுத்தலை என வந்து நாளடைவில் வரத்தலம் எனப் பெயர் கொண்டதாகவும் கூறப்படு கிறது.

### நித்திய நைமித்திய உற்சவ ஒழுங்குகள்

கற்பகநாயகியின் வழித்தோன்றலில் சங்கரநாதர் கனகசபைப்பிள்ளை (சேர் அம்பலவாணரின் மைத்துனர்) தேவையான பொருள்கள் திரவியங்கள் வழங்கி யதுடன் பூசைகளை அந்தணர் களைக் கொண்டே செய்வ

# தெல்லிப்பழை பன்னாலை
# தலம் கற்பக விநாயகர் ஆலய
# றா கும்பாபிஷேகம்
# 02.07.2020

## ழை - பன்னாலை
## லய தொன்மைச் சிறப்பும் வரலாறும்

்த்தும் அவர்களை ஆதரித்தும் வந்துள்ளார். கால ஓட்டத்தில் கோயில் நிர்வாகம் அந்தணர்களிடம் கையளிக்கப்பட்டு இன்று ஆதின கர்த்தாக்களில் ஒருவரான பிரம்மஶ்ரீ மகேஸ்வரசர்மா மகேந்திரசர்மா அவர்களின் நிர்வா- கத்தில் சிறப்புற இயங்கி வருவது உள்ளங்கை நெல்லிக்கனி.

**கும்பாபிஷேகங்கள்**

1872 இல் முதலாவது குடமுழுக்கு பிரம்மஸ்ரீ பிள்ளையார் பட்டராலும் 912இல் இரண்டாவது குடமுழுக்கு அருணாசல சாத்திரியாராலும் ; 1956.07.09இல் மூன்றாவது குடமுழுக்கு புத்தூர் மார்க்கண்டேயக்-குருக்கள் வைத்தியநாதக் குருக்களாலும்
1977.04.06 இல் நான்காவது குடமுழுக்கு சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் சோமஸ்கந்தக்குருக் களாலும் 2004.07.04 இல் ஐந்தாவது குடமுழுக்கு ஆதினகர்த்தாக்கள் பிரம்மஸ்ரீ இ.சபாரத்தினக்குருக்கள். பிரம்மஸ்ரீ ம . மகேந்திரசர்மா ஆகியோர் தலைமையில் சிவஸ்ரீ சதாசிவ சுகுமாரக்-குருக்கள் இனிதே நடத்தியுள்ளார்.

**ஆலய அமைப்பு**

பரிவார மூர்த்திகளாம் கஜலக்சுமி. சந்தானகோபாலர். வள்ளி தெய்வய-ானை சமேத முருகப்பெருமான். நவக்கிரகங்கள். வைரவர். சண்டேசுரர் ஆகியோர் சூழ விநாயகர் வீற் றிருக்கிறார். கோயில்களின் அமைப்பிற்குரிய மண்டபங்களாகிய கர்ப்பக்கிருகம். அர்த்தமண்டபம். மகாமண்டபம். நிருத்-தமண்டபம். தம்பமண்டபம். வசந்தமண்டபம். மணிமண்டபம் என்பனவும் அமையப்பெற்றுள்ளது . வசந்த மண்டபத்திலிருந்து விநாயகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமானுடன் விழாக்காலங்களில் எழுந்தருளி உலா வருவார்.
வெளிவீதியின் வடக்கே அமைந்த தீர்த்தக்கேணி 1992 இல் இடப்பெ-யர்வுடன் தூர்ந்த நிலையில் இப்பொழுது நிலம் தரைமட்டமாக்க-ப்பட்டுள்ளது. தீர்த்தக் கேணி அமைப் பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிற நிலையில் விநாயகரின் அருள் வேண்டி பிரார்த்திக் கின்றனர்.
**அவனன்றி ஓர் அணுவும் அசையாது**

**கொடியேற்றம்**

1914 இல் 18 அடி உயரமான கொடித்தம்பம் அமைக்கப்பெற்றதாகக் கூறப்படினும் 1856இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின்னர் சித்திரை வருடப்பிறப்பை நிறைவு நாளாகக் கொண்டு 15 நாள்கள் அலங்கார உற்சவம் நடைபெற்றுள்ளது. 1977.07.02 இல் இருந்து கொடியேற்றம் ஆவணி அமாவாசையில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும் வண்ணம் 12 தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது. இடப்பெயர்வின் பின்னர் (1992)1999 இல் மீன்குடி யேற்றத்துடன் ஆதீன கர்த்தாக்களில் ஒருவரான பிரம்மஸ்ரீ ம.மகேந்திர சர்மா அவர்கள் ஊரவர்களின் உதவியுடன் பாலஸ்தாபனம். செய்து செவ்வாய். வெள்ளிக்கிழமைகளில் விசேடபூசைகள் நடத்தியுள்ளார். ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட ஆயை புனருத்தாரண சபையினரின் விடா முயற்சியால் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 2004.07.04 இல் குடமுழுக்குக் கண்டது.
இராஜகோபுரம் 43 அடி உயரமான பஞ்சதன இராஜகோபுரம் அமைக்க-ப்பட்டு 2014.08.18.இல் ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ ம. மகேந்திரசர்மா தலைமையில் பிரதமகுரு சிவஸ்ரீ சதாசிவ சுகுமாரக்குருக்கள் சிவஸ்ரீ மகாதேவக் குருக்களுடன் பல குருமார்களை இணைத்து அருட்கடாட்சம் நிறைந்த குடமுழுக்கு நடத்தியுள்ளனர்.

**திருவருள்மிகு வரத்தலம் கற்பகவிநாயகர் மீது பாடப்பட்ட பாடல்கள்**
01. திருஊஞ்சல் (கனகசபைப்புலவர்) 02. இரட்டைமணிமாலை (கவிஞர் செ.கதிரேசம்பிள்ளை) 03. திருப்பதிகம் (அரட்கவி சி.விநாசித்தம்பி புலவர்). 04. விநாயகர் பரத்துவமாலை (அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவர்) எல்லோரும் சேர்ந்து விநாயகர் கழலடி பணிந்திடுவோம்.

## ஆதீனகர்த்தாவின் ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் எமது பன்னாலைப் பதியில் வரம் அருளும் வரத்தலம் கற்பக விநாயகனாக அருள் பாலித்து நிற்கும் எம் பெருமானுக்கு 02.07.2020 இன்று கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பதை எண்ணிப் பெருமகிழ்வடைகின்றேன்

எம் பெருமானின் ஆலயமானது தொன்மையான வரலாற்றைப் பறைசாற்றி நிற்பனவாகவும் மாருதப்புரவீகவல்லி காலத்தில் எழுந்த உன்னதமான ஆலயமாகவும் அமையப் பெற்றது சிறப்பானதேயாகும்.
தற்கால சூழ்நிலையிலும் எம் பெருமானுக்கு பல அல்லல்களையெல்லாம் அகற்றி கும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெறவிருப்பது எல்லோரும் அறிந்த விடயமேயாகும் இவையெல்லாம் எம் பெருமானுக்கு அருட்கடாஸ்சும் என்பதில் எவ்வித ஐயமில்லை.
கும்பாபிஷேகப் பெருவிழாவின் பலன் சகல அடியவர்கட்கும் சென்றடைய வேண்டும். என எல்லாம் வல்ல எம் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

" மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம் "

ம. மகேந்திரசர்மா

## வரங்களை வாரிவழங்கும் பன்னாலை வரத்தல விநாயகர்



தன்னை அண்டிவரும் பக்தர்களுக்கு வரங்களை வாரிவழங்கும் வரத்தல விநாயகராக பன்னாலையில் எழுந்தருளி யிருக்கும் வராத்தல விநாயகரின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா-கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறப் பிரார்த்திக்கின்றேன். இந்த ஆலயத்தின் சிறப்பு ஆலய சிவாசாரியர் பக்தர்கள் எல்லோரும் ஒற்றுமையோடு செயல்படுவது தான் திருப்பணிகளும் மஹாகும்பாபிஷேகச் சிறப்புற நடைபெற அதுவே காரணம் கும்பாபிஷேகம் நிறைவெய்தியவுடன் பிரதான ஆசார்யர் விநாயகப்பெருமானிடம் இந்த உலகத்தில் சந்திரன் சூரியன் உள்ளவரைக்கும் இந்தப்பிம் பதில் சான்னித்தியமாக வீற்றிருந்து அருள் புரிய வேண்டும். என்பதாகும் இதையே ஆசீர்வாதமாக கூறி விநாயகப்பெருமான் சர்வசான்னித் தியராக வீற்றிருந்து பக்தர்களுக்கு திருவருள் புரிவாராக


சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்

## வரமே தலமாகும் வரத்தலம்

வரமே தலமாகும் வன்னியே விருட்சமாக
வரத்தலம் கற்பக விநாயகர் பேறாக
பெருமா முகம் நீக்கிய புண்ணிய வரதா
பொழில் மேவு பன்னாலையில் வரமானாய்
சிரமேல் கரங்குவிக்கத்தித்திக்கும் கும்பாபிஷேகம்
சோபிக்கவே கொரோனா எமைவிட்டோடும்
பிரமாபுரத் தேவரும் பார்க்கவே ஓடிவருவர்

கலாபூஷணம்
கே.எஸ். சிவஞானராஜா





## யாழ்ப்பாணம் நாவற்குழி மேற்கு

# அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோயில்

## நூதன பஞ்ச தள திருக்கோபுர சகிதம் நவகுண்ட மூலவர் கருவறை புனராவர்த்தன

# திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா-02.07.2020

தமிழரின் பாரம்பரிய ஐவகை நிலங்களில் ஒன்றான மருதமும், தட்சண கைலாச சிவபூமி என போற்றப்படும் இவ் ஈழ வள திருநாட்டின் வடக்கே தென்மராட்சியின் கண்ணாக நெற்சேனையும், குளங்களும், நாவல் மர மணற்பரப்புடன் பல சரித்திர பழமையான ஆலயங்கள் அமையப்பெற்று நடுநாயகமாக விளங்கும் நாவற்குழி சித்திவிநாயகப் பெருமானுக்கும், சுயம்பு ஆதி சக்தியான நாச்சிமார், வள்ளி தெய்வானை உடனாய் வேலவர், தென்முகக்கடவுள், மகா இலட்சுமி, சனீசுவரர், வைரவர், மூசிகம் பலிபீடம், மூலாதாரக்கணபதி, சண்டிகேசுவரர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் நூதனமாக அமையப்பெற்றிருக்கும் பஞ்ச தள திருக்கோபுரத்திற்கும், மூல மூர்த்தியாம் எம்பெருமான் சித்திவிநாயகரின் துவி தள கருவறைக்கும் நிகழும் மங்களகரமான வீறியெழல் ஆண்டு ஆடவைத்திங்கள் பதினெட்டாம் நாள் (02.07.2020) வியாழக்கிழமை அனுச நட்சத்திரமும் கன்னி இலக்கினமும் சித்த யோகமும் கூடிய காலை 11:26 மணி முதல் 12:57 வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் தவறாது வருகை தந்து திருக்குடமுழுக்கு பெருவிழா தரிசனம் கண்டு எம்பெருமான் திருவருளோடு சகல சௌபாக்கியங்களையும் பெற்றுய்யும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

**பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார்**
**"சிவகாம கிரியாஜோதி ஆகம கிரியாமானு ஈசான சிவாச்சாரியார்"**
**பிரம்ம ஸ்ரீ.இ.கஜராஜக்குருக்கள்**
**(ஆலய பிரதம குரு-நாவற்குழி)**

**நிர்மாண சிற்பாசாரி / வர்ணப்பூச்சு**
**ஸ்தபதி நடராஜன் இராதாகிருஸ்ணன்**
**மயிலாடுதுறை, தமிழ்நாடு.**

**எம்பெருமான் அடியார்கள் சகல திருச்சடங்குகளிலும் திருவெண்ணெய்க் காப்பு போன்ற அருட்பேறுகளிலும் காணுதற்குரிய திருக்குடமுழுக்கு பெருவிழாவை தரிசிப்பதோடு எம்பெருமானுக்கு வேண்டிய சமித்து, பால், இளநீர், பூக்கள், போன்ற சிவதிரவியங்களை வழங்கி எல்லாம் வல்ல இறையருள் கிடைக்கப் பெறுவீர்களாக.**

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**(இதனைத் தொடர்ந்து திருநாட்தொகு முழுக்கு அரைமண்டலமாக 24 நாட்கள் நடைபெறும்) –**

**"பஞ்சதள திருக்கோபுர தரிசனம் காண பக்த கோடிகளே திருக்கோயிலை நாடுங்கள்"**

**நாவற்குழி சித்திவிநாயகர் திருக்கோயில் நம்பிக்கைப் பொறுப்புச்சபை**
**கேரதீவு பிரதானசாலை, நாவற்குழி மேற்கு, நாவற்குழி, கைதடி, யாழ்ப்பாணம்.**

சித்திவிநாயகா

விளம்பர அனுசரணை:
உலகதரம் வாய்ந்த முதல்தர வர்ணபூச்சு நிப்பொன் பெயின்ற்

NIPPON PAINT

**Devika Paints**
**தேவிகா பெயின்ற்**



021 223 2389
No.43, பருத்தித்துறை வீதி,
கோப்பாய் சந்தி.



**Nippon Paint Lanka (Pvt) Ltd.**
Nippolac Towers' 69A,
Buthgamuwa Road, Rajagiriya,
Sri Lanka.
011 43 56 900

# தேர்தல் அட்டைகளில் பிழைகள் காணப்படலாம்

## இருந்தாலும் அவை செல்லுபடியாகும் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

உத்தியோகபூர்வ தேர்தல் அட்டைகளில் சில சந்தர்ப்பங்களில் பெயர், பாலினம், அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றில் பிழைகள் அல்லது மாற்றங்கள் காணப்படலாம். எனினும், அவை வாக்களிப்பில் பாதிப்பை ஏற்படுத்தமாட்டா. அடையாள அட்டை இலக்கத்தில் மாற்றங்கள் காணப்படுமாயின் அவையும் தேர்தலில் வாக்களிப்பதில் பாதிப்பை உண்டாக்கப் போவதில்லை என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஓகஸ்ட் மாதம் 3, 4 ஆம் திகதிகளில் பரப்புரை நடவடிக்கைகள் அல்லது விளம்பரங்கள் பிரசுரிப்பது நிறுத்தப்படும். 10 ஆதரவாளர்கள் கலந்துகொள்ளும் கூட்டமாக இருந்தாலும் அதில் கலந்துகொள்பவர்களுடைய பெயர்ப்பட்டியலை கூட்டத்தை ஏற்பாடுசெய்பவர் வைத்திருக்க வேண்டும்.

வேட்பாளரொருவர் தான் செல்லும் வாகனம் தவிர ஏனைய வாகனங்களில் ஸ்டிக்கர்களை ஒட்டியிருந்தால் அவர்களை கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு உண்டு. அதனை நடைமுறைப்படுத்துமாறு நாம் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். ஒளிப்படம் மற்றும் விருப்பு இலக்கத்துடன் கூடிய பதாகைகள் தேர்தலின் போது காட்சிப்படுத்தப்படக் கூடாது. இது அரசமைப்பில் கூறப்பட்டுள்ள விடயம்.

இந்தமுறை பெரியளவிலான தேர்தல் வன்முறைகள் பதிவாகவில்லை. எனினும், முன்னாள் அமைச்சர்கள் சிலர் ஆதரவாளர்களுக்கு பொருள்களை பகிர்ந்தளிக்கின்றனர் என்றும் அமைச்சின் வாகனங்களை பயன்படுத்துகின்றனர் என்றும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது குறித்து ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

வாக்களிப்பதற்கான நேரத்தை அதிகரிப்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை. மீண்டும் ஒரு முறை அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்கும் பயணம் செய்து நிலைமையை ஆராய்ந்த பின்னர் இது குறித்து அறிவிக்கப்படும்.

முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள் சீருடையில் பரப்புரைகளில் ஈடுபடுகின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. வேட்பாளர்களின் ஒழுக்க விதிமுறைகள் இன்னமும் சட்டமாக்கப்படவில்லை. எனவே வேட்பாளர்களால் சில முரண்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டால் அவை தேர்தலில் தாக்கம் செலுத்துகின்றனவா என்பதை ஆணைக்குழு பிரத்தியேகமாக ஆராய வேண்டும்.

முன்னாள் அமைச்சர்கள் கையளிக்காத ஐந்துக்கும் மேற்பட்ட முன்னாள் அமைச்சர்களுக்கு வாகனங்களைக் கையகப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. முன்னாள் இராஜாங்க அமைச்சர்களின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், கையளிக்கப்பட்டிருக்க வேண்டிய சில வாகனங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இதுவரை கையளிக்கவில்லையென்று முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. வாகனங்கள் கையகப்படுத்தப்பட்ட பின்னர் சட்டம் மீறப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், எதிர்வரும் பொதுத்தேர்தலில் குறித்த அரசியல்வாதிகளின் ஆசனங்கள் பறிபோகும் சந்தர்ப்பமுள்ளது-என்று மேலும் தெரிவித்தார். (த)

## தேர்தல் கருத்துக்கணிப்பு எனக் கூறி

# திருடப்பட்டுவரும் தனிநபர் விவரங்கள்

கொழும்பு, ஜூலை 2

**சமூக ஊடகங்களில் தனி நபர்களின் விவரங்கள் சூட்சுமமாக பெறப்படும் நடவடிக்கை குறித்து இலங்கை தகவல் தொழிநுட்ப சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

எதிர்வரும் பொதுத்தேர்தல் குறித்த கருத்துக்கணிப்பை மேற்கொள்வதாக தெரிவித்து இவ்வாறு விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை தகவல் தொழி நுட்ப சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் குறித்த கருத்துக்கணிப்பில் பங்கெடுக்குமாறும் அல்லது குழுக்களில் இணையுமாறும் சமூக ஊடகங்களில் மக்களிடம் வேண்டுகோள்கள் விடுக்கப்படுகின்றன.

இதன் மூலமாக தனிநபர்களிடமிருந்து தகவல்கள் பெறப்படுகின்றன. எனவே சமூக ஊடகங்கள் மூலம் விடுக்கப்படும் இவ்வாறான வேண்டுகோள்கள் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். கருத்துக்கணிப்புகளுக்காக வேண்டுகோள் விடுக்கப்படும்போது அதற்கான நோக்கங்கள் குறித்து பொதுமக்கள் கேள்வியெழுப்ப வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போதும் இவ்வாறான முயற்சிகள் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

# மின்கட்டண தொகை தொடர்பில் அமைச்சரவையே தீர்மானிக்கும்

மின்கட்டண பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் தொடர்பிலான இறுதி முடிவு அமைச்சரவை தீர்மானத்தின் படி எடுக்கப்படுகின்றது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள கடந்த மாதங்களுக்கான மின்கட்டண பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மின் கட்டணங்கள் எந்த விதத்திலும் நியாயமானவை அல்ல என்று மின் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

எனினும், குறித்த வீடுகளில் பயன்படுத்தப்பட்ட அலகுகளுக்கு அமைய மின் கட்டண பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தாம் அமைச்சரவைக்கு விடயங்களை முன்வைக்கவுள்ளதாகவும் அதன்பின் அமைச்சரவையின் தீர்மானத்தின் படி மின் கட்டணம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

தற்போது மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கு மின் நுகர்வோர்களிடம் இருந்து அறவிட வேண்டியுள்ள மின் கட்டணத் தொகை 2ஆயிரம் கோடி ரூபாவைக் கடந்துள்ளதாக மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும், ஜூன் மாதத்தின் பட்டியலில் 90 சதவீதம் தற்போது நுகர்வோரால் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (த)



# விசாரணை குழுவில் முற்பட்ட உபுல் தரங்க

கொழும்பு, ஜூலை 2

இலங்கை கிரிக்கெட் வீரர் உபுல் தரங்க விளையாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடி குறித்து ஆராயும் பொலிஸ் விசாரணைக்குழுவில் முன்னிலையானார்.

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றுள்ளதாக அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த மகிந்தானந்த அளுத்கமகே அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், குறித்த சம்பவம் .தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே தரங்க ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

இந்தநிலையில் 2011 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழுத் தலைவராக இருந்த அரவிந்த டி சில்வா விளையாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடி குறித்து ஆராயும் பொலிஸ் விசாரணைக்குழுவில் நேற்றுமுன்தினம் முன்னிலையாகி 6 மணித்தியாலங்கள் வாக்குமூலம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# காணிப் பிணக்குகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டன

மன்னார், ஜூலை 2

முசலி பிரதேச செயலகத்தில் காணிப் பிணக்குகள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று தீர்வுகள் வழங்கப்பட்டன.

மன்னார் முசலி பிரதேச செயலகத்தில் வடக்கு மாகாண காணி விசாரணைக்குழு பொதுமக்களை சந்தித்து நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த காணி தொடர்பான பிரச்சினைகளை விசாரணை செய்து அவற்றுக்கு தீர்வு வழங்கியது.

முசலி பிரதேச செயலாளர் எஸ்.சிவராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு நேற்று முற்பகல் பத்து மணியளவில் முசலி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



முசலிப் பிரதேசத்தில் காணப்படும் காணிப்பிணக்குகள் தொடர்பாக ஏற்கனவே வடக்கு மாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் முசலி பிரதேச செயலகத்துக்கு வருகைதந்த வடக்கு மாகாண காணி விசாரணை ஆணைக்குழு சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாக விசாரணை நடத்தி தீர்வுகள் வழங்கியது. (த-213)

# சிறுவர் கதை எழுத்தாளர் வெத்தசிங்க காலமானார்

கொழும்பு, ஜூலை 2



சிறுவர்கள் கதை எழுதுதலில் பிரபல எழுத்தாளர் சிபில் வெத்தசிங்க காலமானார். அவர் நோய்வாய்ப்பட்டு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்தநிலையில், நேற்று முன்தினம் இரவு 92ஆவது வயதில் காலமானார்.

கலாகீர்த்தி சிபில் வெத்தசிங்க சிறுவர்கள் கதை எழுத்தாளர் மற்றும் இலங்கையில் எடுத்துக்காட்டுக்கான (ILLUSTRATOR) படங்கள் வரைபவர். அவர் எழுதிய புத்தகங்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. வெத்தசிங்க 200 க்கும் மேற்பட்ட சிறுவர் புத்தகங்களை எழுதியுள்ளார்.

அவரது முதல் புத்தகம் 'குடா ஹோரா' பல சர்வதேச விருதுகளைப் பெற்றது. இறுதியில் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

சிபில் வெத்தசிங்க தொழில் வாழ்க்கையில், அவர் எழுதிய குழந்தைகளின் கதைகள் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் விருதுகளைப் பெற்றதன் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றார்.

அதிக எண்ணிக்கையிலான மாற்று முடிவுகளைக் கொண்ட ஒரு புத்தகத்துக்கு கின்னஸ் உலக சாதனையையும் அவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# கொழும்பு மாநகர உறுப்பினர்களுடன் ரணில் நேற்றுமுன்தினம் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 2
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனாநாயக்க உள்ளிட்ட கொழும்பு மாநாகர சபையின் ஐ.தே.க. உறுப்பினர்களுக்கிடையில் விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடை பெற்றது.

கொரோனாத் தொற்றின் காரணமாகப் பாதிக்கப்பட்ட கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு துரித நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இதன் போது ரணில் விக்கிரமசிங்க ரோசி சேனாநாயக்கவுக்கு ஆலோசனை வழங்கினார்.

முச்சக்கர வண்டி சாரதிகளுக்கான வரி நீக்கம் மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிடத்துக்கு வழங்கப்படும் கட்டணத்தை நீக்குதல் என்பன குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டன.

கொழும்பு மாநகர சபைக்காக மேல் மாகாணசபை 300 கோடி நிதி ஒதுக்கியுள்ளதாகவும், அந்த நிதி கிடைக்கப்பெறாவிட்டால் கொழும்பு மாநகரசபையின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாமல் போகும் என்றும் இதன்போது ரோசி சேனாநாயக்க உள்ளிட்ட மாநகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அந்த நிதியைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு நிதி வழங்கப்படாவிட்டால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் ரோசி சேனாநாயக்க இதன் போது உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

ரணில் விக்கிரமசிங்கவினுடைய ஆலோசனையின் அடிப்படையில் கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரோசி சேனாநாயக்க இதன்போது தெரிவித்தார். (ஐ)

# எம்.சி.சி. ஒப்பந்தம் கிழித்தெறியப்படும்

## சஜித் தெரிவிப்பு



**சிலாபம், ஜூலை 2**
**எனது ஆட்சியின்கீழ் எம்.சி.சி உடன்படிக்கை கிழித்தெறியப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். சிலாபம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
எமது ஆட்சியில் எம்.சி.சி உடன்படிக்கை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட போது அதற்கு நான் எதிர்ப்பை வெளியிட்டேன். அதில் கைச்சாத்திடக்கூடாது எனவும் திடமாக வலியுறுத்தினேன். அதுமட்டுமல்ல ஜனாதிபதித் தேர்தலின்போது குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திடமாட்டேன் என மக்களுக்கு நான் கூறியிருந்தேன். எதிரணி வேட்பாளரும் அந்த வாக்குறுதியை வழங்கினார். ஆனால், அவருக்கே பெரும்பான்மையான மக்கள் ஆதரவு வழங்கினர். எனினும், எம்.சி.சி உடன்படிக்கை இன்னும் இரத்துச் செய்யப்படவில்லை. அதிலுள்ள 70 வீதமானவை நல்லம் என தற்போது கூறிவருகின்றனர். இதன்மூலம் ஆட்சியாளர்களின் இரட்டை வேடம் அம்பலமாகியுள்ளது. எது எப்படியிருந்தாலும் எமது ஆட்சியில் குறித்த உடன்படிக்கை நிச்சயம் கிழித்தெறியப்படும் - என்றார். (ப-44)

# கருணா, கே.பி தேர்தல்கால பேசு பொருளாகின்றார்கள்

## ஹக்கீம் தெரிவிப்பு

கருணா அம்மான், கே.பி. போன்றவர்கள் தேர்தல் காலங்களில் பேசு பொருளாகிறார்கள். கருணா அண்மையில் தெரிவித்த கூற்றினால் படையினருக்கு ஏற்பட்ட அவமானத்துக்கு அரசாங்கம் என்ன சொல்கின்றது. இவ்வாறு கேள்வி எழுப்பினார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான ரவூப் ஹக்கீம்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
கருணாவின் கூற்றால், தெற்கில் சிங்கள பௌத்த மக்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். படையினர் குறிப்பாக இராணுவத்தினர் தாம் அவமானப்படுத்தப்பட்டதாகக் கருதுகின்றனர். பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்தவர்களில் கருணாவும் ஒருவராக இருக்கிறார். இப்போது அவரை தம்மிலிருந்து வேறுபடுத்திக் காட்டி தப்பித்துக் கொள்ள ஆட்சியாளர்கள் எத்தனித்து வருகின்றனர். முந்திய பொதுத்தேர்தல் காலத்தில் கே.பி. மலேஷியாவின் கோலாலம்பூரில் வைத்து கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு இரகசியப் பொலிஸாராலும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினராலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் என்ன நடந்து விட்டது? பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு கே.பி. யும் பொறுப்புக் கூறவேண்டும். அரசாங்கம் அவரைக் கையேற்ற பின்னர் அவரிடமிருந்ததாகக் கூறப்பட்ட ஆறு கப்பல்களுக்கும் என்ன நடந்தது? அவர் தான் புலிகள் இயக்கத்துக்கு சர்வதேச மட்டத்தில் நிதி சேகரிப்பவராக இருந்தார் எனக் கூறினார்கள். அவரிடமிருந்த பணத்துக்கு என்னவானது? சொத்துக்கள் எங்கே? இத்தகையவர்களெல்லாம் தேர்தல் காலங்களில் மட்டும் மக்கள் மயப்படுத்தப்படுகின்றனர். அவ்வளவு தான் - என்றார். (ப)

# பிரசாரத்தை ஆரம்பித்தார் துரைராசசிங்கம்

மட்டக்களப்பு, ஜூலை 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி.துரைராசசிங்கம் தனது சொந்த ஊரான வந்தாறுமூலையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பித்து வந்தாறுமூலை மாரியம்மன் ஆலயம் மற்றும் விஸ்ணு ஆலயம் ஆகியவற்றில் விசேட தரிசனமும் மேற்கொள்ளப்பட்டு பிரசாரப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு வாலிபர் முன்னணித் தலைவர் லோ.தீபாகரன் உட்பட வந்தாறுமூலைப் பிரதேசத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், துரைராசசிங்கத்தினதும், அதிதீவிரப் பற்றாளர்கள் புடைசூழ பிரதேசத்தின் பல பகுதிகளில் தேர்தல் பிரசாரப் பணிகளை அவர் மேற்கொண்டார். (ப-150)

# வாக்குகளை உடைப்பதற்கு அரச முகவர்கள் களமிறக்கம்

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

நுவரெலியா, ஜூலை 2
மலையகத்தில் புதிதாகப் போட்டியிடும் சிலர் அரசியல் முகவர்கள். தமிழ் வாக்குகளை உடைப்பதற்காகவே இவர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
மொட்டுக் கட்சியில் மூன்று சிங்கள வேட்பாளர்களும், 8 தமிழ் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். எனவே, சிங்கள மக்களின் வாக்குகள் மேற்படி மூவருக்குமே சென்றடையும். தமிழ் வாக்குகள் உடையும். எனவே, தமிழ் வேட்பாளர்கள் வெற்றிபெறுவது கடினம், ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் முற்போக்குக் கூட்டணி மூன்று தமிழ் வேட்பாளர்களையே நிறுத்தியுள்ளது. அந்த மூவரும் வெற்றிபெறுவது உறுதி. அதேபோல் இந்தத் தேர்தலில் அரசியல் முகவர்கள், சிலர் ஒப்பந்தக்காரர்களாகக் களமிறக்கப்பட்டுள்ளனர். திகாம்பரம் பக்கம் இருந்த ஒருவர் இறுதி நேரத்தில் ஐக்கிய தேசியக்கட்சி பக்கம் தாவி, ரணிலின் முகவராகப் போட்டியிடுகின்றார். அடுத்தது அனுசா அமேஷ்வரன். சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணிக்கும் அவருக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. மலையக மக்கள் முன்னணி எம்வசமே உள்ளது. சுயேச்சையாகப் போட்டியிடுபவர்களால் வெற்றி பெறமுடியாது என்பதே யதார்த்தம். அரசாங்கத்தின் ஒப்பந்தக்காரராகவே அனுசா போட்டியிடுகின்றார் - என்றார். (ப)

# மிளகுச் செய்கையாளருக்கு 85 ஆயிரம் ரூபா நிவாரணம்

மிளகு விலையில் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 85 ஆயிரம் ரூபா நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு எற்றுமதி விவசாய திணைக்களம் தீர்மானித்துள்ளது. 3 வருடங்களுக்கு அதிக காலம் மிளகு பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வருபவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஏ.பீ.ஹீன்கேந்த தெரிவித்துள்ளார். (க)

# மக்கள் வேறுபாடுகளின்றி வாழும் மாகாணம் கிழக்கு

## ஆளுநர் பெருமிதம்

மட்டக்களப்பு, ஜூலை 2
கிழக்கு மாகாணம், மூவின மக்களும் ஒன்றாகச் செயற்படும் மாகாணமாகும். இங்கு இன, மத, மொழி வேறுபாடுகளின்றி மக்கள் ஒத்துழைப்பாக இருந்து வருகின்றனர் என கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி.அனுராதா ஜகம்பத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
ஸ்ரீ சீலாலங்கார ஆரம்பப் பாடசாலையில் பௌத்த சமயத்தை மாத்திரம் கற்பிக்காது வேறு மொழிகளான பாலி மொழி, சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் கற்பிக்கப்படுவதுடன், குறிப்பாக தமிழ் மொழி கற்பிக்கப்படுவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களும் ஒன்றாகச் செயற்படுவதுடன், சிங்களப் பாடசாலையில் தமிழ் மொழி கற்பிக்கப்படுவது இன நல்லுறவைப் பேணும் வகையில் உள்ளது - என்றார். (ப)



பளை சோரன்பற்று சி.சி.த.க பாடசாலைக்கு ஒவ்வர் சிலோன் நிறுவனத்தினரால், கைகழுவும் உபகரணத் தொகுதி கையளிக்கப்பட்டுள்ளது. (க-159)

# கருணாவுக்கு பொதுமன்னிப்பு

## மஹிந்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

12 ஆயிரம் புலிகளுக்கு மறுவாழ்வு வழங்கி பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கும்போது கருணா அம்மானுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

கருணா அம்மானுக்கு பொது மன்னிப்பு வழங்கியா விடுதலை செய்யப்பட்டார்? எனக் கேள்வி எழுப்பப்பட்ட போது, அதற்குப் பதிலளித்த பிரதமர் கருணா உள்பட 12 ஆயிரம் புலிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கினோம் என்றார். கொலைக் குற்றத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர் சுனில் ரத்னாயக்க என்பவரும் பொதுமன்னிப்பின் கீழா விடுதலைசெய்யப்பட்டார் என்று கேட்கப்பட்டபோது,

அவ்வாறு பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவில்லை. அது ஜனாதிபதியின் தனிப்பட்ட மன்னிப்பு. ஜனாதிபதி பிரதம நீதியரசருடன் கலந்தாலோசித்தே, தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி அவரை விடுதலை செய்தார் என்று கூறினார். (ஒ.5)

# சி.ஐ.டியினர் என்று கூறி பணம் பறிக்கும் கும்பல்

## தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சி.ஐ.டியினர் எனத் தெரிவித்து பணம் பறிக்கும் கொள்ளைக் கும்பல் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது. இந்தக் கும்பல் அண்மைய நாள்களாக தெல்லிப்பழை, கீரிமலை பிரதேசங்களில் பலரிடம் பணத்தைப் பறித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

மோட்டார் சைக்கிள்களில் உலாவும் மூன்று பேர் கொண்ட கும்பல், வீதிகளில் செல்பவர்களை மறித்து தாம் சி.ஐ.டியினர் என்று கூறி மிரட்டுகின்றனர். அவர்களின் மிரட்டல்களால் பயந்து பலரும் பணத்தைப் பறிகொடுத்துள்ளனர். கீரிமலையில் சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றுள்ளது. இதனை அறிந்த பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டபோது, பலரும் இவ்வாறு பணத்தைப் பறிகொடுத்தமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் பயப்படாது முறைப்பாடு மேற்கொள்ளவேண்டும் என்று பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஒ.5,26)

# வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் கைதுகள்

## ரி.ஐ.டியின் நடவடிக்கைகள் ஓர் இனத்துக்கு எதிரானதல்ல என்கிறார் மஹிந்த ராஜபக்ச



**யாழ்ப்பாணம், ஜூலை 2**

**பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் வடக்கில் மாத்திரம் சந்தேக நபர்கள் கைது செய்யப்படவில்லை. தெற்கிலும் கைது செய்யப்படுகின்றனர். பயங்கரவாத தடுப்புப் பிரிவின் நடவடிக்கை ஓர் இனத்துக்கு மாத்திரம் எதிரானதல்ல இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் வடக்கில் 21 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இராணுவ முகாமுக்கு அருகில் குண்டுகள் இருந்து மீட்கப்பட்டதாக அறிகின்றேன். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கலாம். மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இத்தகைய நடவடிக்கைகள் அவசியமானது. இன்றேல் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது என்று கூறிய பிரதமர், குற்றவாளிகளை கைதுசெய்ய வேண்டாம் என்றா கூறுகின்றீர்கள் எனவும் பதில் கேள்வி எழுப்பினார். தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுக் காலை அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

### குடிநீர்த் திட்டம்

யாழ்ப்பாண மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆனையிறவு கடல்நீரேரி, தொண்டைமனாறு கடல்நீரேரி ஆகியவற்றை நன்னீராக்கி குடிதண்ணீர் விநியோகத்தை முன்னெடுக்கவுள்ளோம். 'முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் காலத்தில் கப்பூதுவெளியில் குடிநீர்த் திட்டத்துக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதே' என்று ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது பிரதமரிடம் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த பிரதமர், அது மழை நீரை சேகரிக்கும் திட்டம் என்றார்.

### உறவுப் பாலம்

வடக்கு ஊடகங்கள் வடக்கு செய்திகளையும் தெற்கு ஊடகங்கள் தென்பகுதிசெய்திகளையும் பிரதானப்படுத்தி வருகின்றன. இந்தநிலை மாறி ஊடகங்கள் இரு பிரதேசங்களுக்குமான உறவுப்பாலமாக விளங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அரசியல்வாதிகள் செய்யத் தவறியதை ஊடகங்கள் செய்ய வேண்டும். அபிவிருத்தி தொடர்பில் அரசியல்வாதிகளை ஊடகவியலாளர்களே தூண்ட வேண்டும். கடந்த 5 வருட காலத்தைப் பின்னோக்கிப் பார்த்தால் வடக்கில் எந்தவொரு அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை. தெற்கிலும் அதே நிலைமைதான். இதற்குக் காரணம் முன்னைய அரசும் அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும்தான்.

### பணம் திரும்பியது

கடந்த அரசின் காலத்தில் வடபகுதியின் அபிவிருத்தியின் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்ட பணம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. வடக்கிலே அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டும். இதன்பொருட்டு புலம்பெயர் நாடுகளிலிருந்தும் முதலீட்டாளர்கள் இங்கு வருவார்களேயானால், அவர்களுக்கு உரிய பாதுகாப்பும் சலுகைகளும் வழங்கப்படும். அங்கிருந்து வரும் முதலீட்டாளர்கள் வடக்குச் செல்லாது கொழும்பிலேயே தங்கி விடுகின்றனர்.

நாட்டு அபிவிருத்தி மற்றும் மக்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் திட்டங்களின் போது வடக்கு மற்றும் தெற்கு என்ற பேதம் இல்லை.

### தேர்தலின் பின்னர் பார்ப்போம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்கும் என்று தெரிவித்த கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பிரதமர், எவரும் ஒத்துழைப்பு வழங்கலாம் அதனை நாம் வரவேற்போம். எதிர்ப்பவர்கள் எதிர்க்கலாம். தேர்தலின் பின்னரே ஏனைய தரப்புக்கள் வழங்கும் ஆதரவு தொடர்பில் பரிசீலிப்போம் என்றார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் வடக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பில் தங்கள் கருத்தென்ன? என்ற கேள்விக்கு பதிலளித்த பிரதமர், காணாமல் போனவர்கள் மீண்டும் வரவில்லை என்றாலோ உலகின் எந்தப் பகுதியிலும் அவர்கள் இல்லை என்றாலோ அவர்கள் உயிரிழந்து விட்டார்கள் என்றே அர்த்தம். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதில் நாம் முன்னுரிமை வழங்குகின்றோம். வீடமைப்புத் திட்டங்களில் அவர்களுக்கு முன்னு ரிமை வழங்கப்பட்டு வருகின்றன என்றார்.

எதிர்வரும் தேர்தலில் டக்ளஸ் தேவானந்தா போன்ற சிறந்தவர்களுக்கும் எமது கட்சியின் உறுப்பினர்களுக்கும் வாக்களித்து அவர்களை வெற்றிவாகைசூட உதவுங்கள். அதன் மூலம் வடக்கின் அபிவிருத்தியை மேம்படுத்துங்கள். நாடாளுமன்றத்திற்கு வந்து கூக்குரலிடுவதனால் எந்தப் பயனும் இல்லை. மக்களின் பிரச்சினை குறித்து பேச வேண்டும். வெறுமனே அரசியல் பேசி எந்தப் பயனும் இல்லை - என்றார். (ஒ.5)

# சஜித்தின் கூட்டத்தில் சோதனைக் கெடுபிடி!

வவுனியா, ஜூலை 2

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா மற்றும் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கலந்து கொள்ளும் தேர்தல் பரப்புரைக் கூட்ட மண்டபத்தை சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுக் காலை கடும் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.



சிறப்பு அதிரடிப்படையினர் வீதிகளில் வெடிபொருள் உள்ளதா எனக் கண்டறியும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன் மண்டபத்தில் வாயிலில் ஊடகவியலாளர்களில் ஒளிப்படக் கமராக்கள், ஒலிவாங்கிகள் சோதனை செய்யப்பட்டதுடன் அங்கு செல்லும் அனைவரும் உடற்சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

மண்டப வளாகத்துக்குள் மோட்டார் சைக்கிள் உட்பட்ட வாகனங்களை கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் மண்டபத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திலேயே வாகனங்களை நிறுத்தி நடந்துவர பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5.18)

# எனது ஆட்சியில் தூக்கு நடைமுறை

## சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 2

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களுக்கு எமது ஆட்சியின் கீழ் சாவுத் தண்டனை வழங்குவதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதிகளாலும், அடிப்படைவாதிகளாலும் மிலேச்சத்தனமாக முன்னெடுக்கப்பட்ட தாக்குதலே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலாகும். பயங்கரவாதிகள் தொடர்பில் தெளிவானதொரு நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன். அதாவது பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள், திட்டமிடுபவர்கள், செயற்படுத்துபவர்கள் என்று அனைவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும். இது தவறான முடிவாக இருக்காது. ஓகஸ்ட் 5ஆம் திகதி வெற்றிபெற்ற பின்னர், இதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இம்முறை ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் அமோக ஆணையை வழங்கி, புதியதொரு பயணத்துக்கு ஆதரவை வழங்குவார்கள் என நம்புகின்றேன்- என்றார். (ஒ.5,44)

## கைதியின் மலவாயிலில் ஹெரோய்ன் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரின் மலவாயிலில் இருந்து 4 பைக்கள் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் வைத்து 50 மில்லிகிராம் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவரிடத்தில் நேற்று இரவு முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது அவரது மலவாயிலில் இருந்து 4 பைக்கள் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# கருணா அம்மானுக்கு பொதுமன்னிப்பு எனில் முன்னாள் போராளிகளைக் கைதுசெய்யலாமா?

### மஹிந்தவின் பேச்சு நகைப்புக்கிடமானது என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 2

'கருணா அம்மானுக்கு ஏற்கனவே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுவிட்டதெனில் அவர் தற்போது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால் கைதுசெய்யமாட்டீர்களா? அப்படியெனில் முன்னாள் போராளிகளைத் தற்போது சந்தேகத்தில் கைதுசெய்வது எந்தவகையில் நியாயம்? பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பேச்சு நகைப்புக்கிடமாக இருக்கின்றது.' இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

'கருணா அம்மானின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவைதான். எனினும், முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக்குள் கருணா அம்மானும் உள்ளடங்குகின்றார். எனவே, அவருக்குப் பொதுமன்னிப்பளிக்கப்பட்டுவிட்டது' எனத் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான நேற்றைய சந்திப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகச் செயற்படுகின்றனர் என்ற குற்றச் சாட்டில் புனர்வாளிக்கப்பட்டு விடு விக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தற்போது கைது செய்யப்பட்டு வருகின்றார்கள்.

ஆனால், ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைப் போர்க்களத்தில் கொன்றழித்தோம் என்று தற்போது பகிரங்கமாகத் தெரிவித்துவரும் கருணா அம்மான் சுதந்திரமாக நடமாடுகின்றார். அவர் இன்னமும் கைதுசெய்யப்படவில்லை.

இந்தநிலையில், அவரைத் தலையில் வைத்துக் கொண்டாடும் விதத்தில் பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார். சட்டமும் நீதியும் எல்லோருக்கும் சரி சமமாக இருக்க வேண்டும். ஆனால், இந்த ஆட்சியில் இதை நாம் எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது' - என்றார். (ம-22)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் கலைப் பீடத்தின் தமிழ் துறையின் முன்னாள் துறைத் தலைவரும் தமிழ் துறையின் சிரேஸ்ட பேராசிரியருமான **பேராசிரியர் கி. விசாகரூபன்** அவர்களது அன்புத் தந்தையாரும் மற்றும் எமது ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுலாகத்தின் சிரேஸ்ட உதவி நூலகருமான கலாநிதி (திருமதி) **மைதிலி விசாகரூபன்** அவர்களது அன்பு மாமனாருமாகிய

**பொன்னையா கிருஷ்ணபிள்ளை**

(மேனாள் உரிமையாளர், "மகேசன் கபே" செல்வச்சந்நிதி தொண்டைமானாறு)

அவர்கள் கடந்த 20.06.2020 சனிக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் எய்தினார் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 05.07.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடா நாட்டில் நடைபெற உள்ளது. அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## பெருமளவான வெடிபொருள்களுடன் கொழும்பில் பெண்ணொருவர் கைது



கொழும்பு, ஜூலை 2

கொழும்பு - ஹோமாகமை, பிட்டிபன பகுதியில் வீடொன்றின் இரகசிய அறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 7 கைக் குண்டுகள், இரண்டு குண்டு துளைக்காத உடல் பாதுகாப்பு அங்கிகள், ஒரு ரிப்பீட்டர் சோர்ட் துப்பாக்கி மற்றும் 81 தோட்டாக்களுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பொன்றின்போதே குறித்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பிட்டிபன பகுதியில் ஏற்கனவே 12 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்ட கட்டடத்தின் உரிமையாளருடன் தொடர்புகளைப் பேணியவர் என்பது தெரியவந்துள்ளது. (ம)

# மரண அறிவித்தல்



தோற்றம்: 11.07.1940 மறைவு: 01.07.2020

## திருமதி கதிரவேலு நாகேஸ்வரி

யாழ். வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, சிட்னி, நியுகாசில் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு நாகேஸ்வரி நேற்று (01.07.2020) புதன்கிழமை இறைவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் உருக்குமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்புக்குட்டி செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரவேலுவின் (பொறியியலாளர்) அன்பு மனைவியும், ஸ்ரீரங்கன் (ஓய்வுநிலை அதிபர்), Dr.யாழினி, ஸ்ரீதரன் (பொறியியலாளர்-அவுஸ்திரேலியா), கமலினி (இரசாயன பொறியியலாளர்), ஸ்ரீமுகுந்தன் (பிரான்ஸ்), சிவாஜினி (கணக்காளர்-அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரன், நாகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான புட்கலாதேவி, வள்ளியம்மை, பரஞ்சோதி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், வனஜா, Dr. யோகேஸ்வரன், சந்தானலட்சுமி (ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்- அவுஸ்திரேலியா), மனோகரன் (செயற்பாட்டு முகாமை யாளர்-சவுதி அரேபியா), அமிர்தரஞ்சனி (பிரான்ஸ்), சத்தியலிங்கம் (கணக்காளர்- அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி அனுராதை கேசவன் (ஆசிரியை-கனடா) அவர்களின் அன்பு அத்தையும், அச்சுதன் (பொறியியலாளர்), Dr.ஆர்த்திகை, Dr. வசீதன், விவேகா (பொறியியலாளர்), முகுந்தராஜ் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), வர்ணசுதன் (பொறியியல்பீடம்- மொறட்டுவ), Dr. அபிராமி, Dr. நிருத்தன், அபிவர்மன் (பொறியியலாளர் -சுவிற்ஸர்லாந்து), கீர்த்தனா (தரநிர்ணய முகாமையாளர் -சுவிற்ஸர்லாந்து), Dr.ஹரிபிரகாஸ், Dr. தான்யா ஈஸ்வரி, கணன் விசாரன் (அவுஸ்திரேலியா), நிவேதினி (முன்னாள் வங்கியாளர்), நிரூசன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), ஹரிராஜன் (மாணவன்-SLIIT), விஜிராஜன் (மாணவன்-புனித தோமஸ் கல்லூரி, கொழும்பு), சாரங்கி (ஆசிரியர் -பிரான்ஸ்), சங்கீதா (கணக்காளர்- பிரான்ஸ்), சாருதன் (பிரான்ஸ்), மிதுசன் (பல்கலைக்கழக மாணவன் அவுஸ்திரேலியா), மகிஷா (மாணவி, அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ரிஷிக் அவிக்னா, அனந்தரேகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2020) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் 21/1, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 021 222 6410, 077 394 6024, 077 361 8121

தகவல் : குடும்பத்தினர்.

## இரண்டரைக் கோடி...

வவுனியா, ஜூலை 2

வவுனியாவில் இரண்டரை கோடி ரூபா பெறுமதியான 201 கிலோ கேரளக் கஞ்சாவைக் கடத்திச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழில் இருந்து மன்னார் உயிலங்குளம் ஊடாக மரக்கறிகளை ஏற்றிச் சென்ற வாகனத்தை வவுனியா பறயனாலங்குளம் சந்தியில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வழிமறித்த பொலிஸார் அதில் சோதனைகளை மேற்கொண்ட போதே மேற்படி கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. வாகனத்தின் சாரதியான பருத்தித்துறையைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-110)

## குடும்பத் தலைவர்...

வராவார். தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26)

## பெருமளவு...

பகுதியில் வைத்து 25 கிலோ கஞ்சா என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 65 வயதான வாகனச் சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கஞ்சா சந்தேக நபர் தப்பிச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவல், சிறப்பு அதிரடிப்படையினருக்குத் தெரிவிக்கப்பட்டது. சிறப்பு அதிரடிப்படையினர் பருத்தித்துறை நகர பேருந்து நிலையத்தில் வைத்து ஹைஏஸ் வாகனத்தை நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மடக்கிப் பிடித்தனர். வாகனத்திலிருந்து 2 கிலோ நிறையுடைய உயிர் கொல்லிப் போதைப் பொருளான ஐஸை மீட்டதாகத் தெரிவிக்கின்றனர். சந்தேகத்தில் வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

வாகனச் சாரதியின் வல்வெட்டித்துறையிலுள்ள வீடு நேற்று சிறப்பு அதிரடிப்படையினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை வல்வெட்டித்துறை கடற்கரையோரம் 25 கிலோ கஞ்சாப் பொதி சிறப்பு அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படவில்லை. (ம-ஒ,5,26)

## எரியுண்ட நிலையில்...

நெல்லியடிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். இதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த பகுதியில் மூன்று நாள்களின் முன்னர் முதியவர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-26)

## மகளிர் அணி...

கட்சியின் உறுப்பினர் என்னும் தகுதியில் இருந்தும், மகளிர் அணிச் செயலர் என்னும் பதவியில் இருந்தும் இடைநிறுத்தியுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராசிங்கம் தெரிவித்தார்.

கடந்த ஜூன் 28ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது கட்சிக்கும், கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும் களங்கம் ஏற்படுத்தும் விதமான கருத்துக்களை முன்வைத்தமை தொடர்பில் கட்சியின் ஒழுக்கக் கோவை அ(1), ஆ(5) ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் அவருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவரை கட்சியின் அனைத்து பதவிகள் பொறுப்புகளிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவருக்கு இன்றைய திகதியிட்டு கடிதம் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டள்ளதுடன், அக்கடிதம் உடன் அவரைச் சேரும் விதமாக வட்சப் மூலமும் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ,5)


### சமையல் ஆள் தேவை

தொல்புரம் சுழிபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்திற்கு சமையல் ஆள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**0777 074 232**


### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும் **கலாவதி முரளியின்** அன்புத் தந்தை

**கந்தையா நடராசா**

அவர்கள் கடந்த (23.05.2020) அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்,**
**உரும்பிராய்.**

### இதயம் நெகிழ்ந்த விழிநீர் அஞ்சலி



சைவ பரிபாலன சபையின் முன்னைநாள் நீண்டகால தலைவர் அமரர் த.சண்முகலிங்கம் அவர்களின் புதல்வியும், சபையின் தற்போதைய உப செயலாளருமாகிய

**வைத்திய கலாநிதி செல்வி**
**வினோதினி சண்முகலிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரது சேவையை நினைவு கூர்ந்து அன்னாரது ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல சிதம்பரம் நடராஜப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சைவபரிபாலன சபை,**
**66,கல்லூரி வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**

**தலைவர், செயலாளர்,**
**பொருளாளர் மற்றும்**
**நிர்வாக உறுப்பினர்கள்.**


### வேலையாள்கள் தேவை

ஊர்காவற்றுறையில் உள்ள பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.
வயது எல்லை 30 இற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
ஆரம்பச் சம்பளம் 45000/=

**077 067 4452**


### மரண அறிவித்தல்



**திருமதி நடராசா மகேஸ்வரி (மகேசு)**

மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மகேஸ்வரி (மகேசு) நேற்று (01.07.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற மகாதேவா நடராசாவின் (CTB) பாசமிகு துணைவியாரும், காலஞ்சென்றவர்களான மகாதேவா செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான வே.மகாலிங்கம், வே.திருநாவுக்கரசு மற்றும் அடைக்கலம்?, வே.தனபாலசிங்கம் (சிவா-ஒஸ்ரியா), வே.குணராசசிங்கம் (குணம்-ஒஸ்ரியா) ஆகியோரின் சகோதரியும், சிவஜினி (வதனி-பிரான்ஸ்), ஜங்கரன் (முகுந்தன்-பிரான்ஸ்), சுபாசினி (கௌரி), விக்கினேஸ்வரன் (லண்டன்), உதயவாணி, செந்தூரன் (லண்டன்), ஈஸ்வரன், துர்க்கா, நர்மதா, வலன்ஸன், நிவேதா (ஒஸ்ரியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், லகிந்தன் (பிரான்ஸ்), சுபிலன் (பிரான்ஸ்), காயத்திரி, சுமதைசன் ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2020) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

| | |
|---|---|
| குணம் - (+436604506849) | கௌரி - (0776589585) |
| வதனி - (0033769581589) | சிவா - (+4369912125468) |
| முகுந்தன்- (0033650108833) | |

### எம் இதயத்தில் துயில்கொள்ளும் எமது அன்புத் தந்தையின்
## ஓராண்டு நிறைவு நாள்



உதயத்தில் 12.09.1953 — இதயத்தில் 14.07.2019

**134, தங்கவில்லா,**
**மானிப்பாய்.**

**அமரர் விஜயசுந்தரம் ஜீவன்குமார்**
**(இளைப்பாறிய உத்தியோகத்தர் லங்கா சீமெண்ட்)**

அன்பை விதைத்து பாசத்தைப் பொழிந்து
பண்புடன் நாம் வாழ வழிதந்த தெய்வம்
மெழுகாய் உடல் உருகி உழைத்து
வாழ்வில் ஒளியேற்றிய பிதா
ஆண்டுகள் புரண்டோடிடும் போதும்
மாண்டுவிடா உம் நினைவுகளை ஏற்று
ஆசி வேண்டி தொடர்கின்றோம்
தந்தையாய் என்றும் காத்தருளும் ஐயா

**உம்பிரிவைத் தாங்கி நிற்கும்**
**மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**


### வேலையாள்கள் தேவை

Ice Packet, யோக்கட், Cup Juice (பால் உற்பத்தி சம்பந்தமான ) தொழில் தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளவும். (முல்லைதீவு மாவட்டம்)

KST Distributor **077 153 1167**

### நாஹா மருத்துவ நிலையம்

சிறுநீரக பாதிப்பினால் வரும் கால்வீக்கம், தீவிரமான முழங்கால் வீக்கம், கண் மூடி கிடக்கும் பாரிசவாதம், மூட்டுவாதம், மாறாத புண்கள் அல்சர் - சிறப்பு மருந்தியல்

வங்கி மூன்லேன், சாத்தாவத்தை வைரவர் கோயிலடி(ஜெகபதி வீடு), மானிப்பாய்.
077 3212 740


### பெயர் மாற்றம்

**யோகேஸ்வரன் நர்த்தினிதேவி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **யோகேஸ்வரன் நந்தினி தேவி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **நந்தினிதேவி** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்து கின்றேன்.

**யோ. நந்தினிதேவி**


தமிழர் தேசத்திற்கு வருகை தரும் சஜித் பிரேமதாஸ் அவர்களை வரவேற்கின்றோம்.

## ஐக்கிய மக்கள் சக்தி

**கௌரவ சஜித் பிரேமதாஸ அவர்களின்**
**யாழ் மாவட்டத்திற்கான மக்கள் சந்திப்புக்கள்**



**02.07.2020- வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| 8.45-9.30 | வட்டுகோட்டை | வடக்கம்பரை அம்மன் கோவில் திருமண மண்டபம் |
| 9.45 - 10.30 | மானிப்பாய் | பிரதேசசபை பொது மண்டபம் |
| 10.45 - 11.00 | சாவற்காடு | மகாத்மா சமூக மையம் |
| 11.30 - 12.15 | காங்கேசன்துறை | இராஜேஸ்வரி மண்டபம் |
| 2.15-3.00 | உடுப்பிட்டி தொகுதி | சித்தி விநாயகர் திருமண மண்டபம் |
| 3.10 - 3.20 | இராஜகிராமம் | கரவைச்சுடர் விளையாட்டுக் கழகம் |
| 3.30- 4.15 | பருத்தித்துறை | தேவாலய பொது மண்டபம் |
| 5.00- 5.45 | ஊர்காவற்றுறை | அனுசா திருமண மண்டபம் |

**03.07.2020 - வெள்ளிக்கிழமை**

9.00-9.45; கிளிநொச்சி — கூட்டுறவு மண்டபம்



**சஜித் பிரேமதாஸ்**
ஐக்கிய மக்கள் சக்தி

2

**அ.கிருபாகரன்**
கிருபா லேனர்ஸ் அதிபர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
## இலங்கை. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## வெளிவாரிப் பரீட்சைகள்
**1) வணிகத்தில் நான்காம் தேர்வு - 2017 (புதிய பாடத்திட்டம்)**
**இறுதிச் சந்தர்ப்பம்**
**2) வணிகமாணி - பகுதி - III - 2017 (பழைய பாடத்திட்டம்)**
**இறுதிச் சந்தர்ப்பம்**

வணிகமாணி புதிய மற்றும் பழைய பாடத்திட்டம் அடிப்படையிலான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. மேற்படி கற்கை நெறிக்கான மீள்பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆவணி (August) மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்த வேண்டிய மீள்பரீட்சைக் கட்டணம் ரூபா.500/= மற்றும் விண்ணப்பப் படிவக்கட்டணம் ரூபா.300/= இனை யாழ்ப்பாண பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இப் பரீட்சைக்கான விண்ண ப்பப் படிவம் மற்றும் பற்றுச்சீட்டினை www.codl.jfn.ac.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ள முடியும். மற்றும் தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் அனுப்ப விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களினை பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி தங்களுடைய பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 24.07.2020 (வெள்ளிக்கிழமை) ஆகும். இப் பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் இது தொடர்பான விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்**
**01.07.2020**

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 23 . 08 . 1969

**மறைவு** 30 . 06 . 2020

### செல்வி Dr. வினோதினி சண்முகலிங்கம்

(யாழ். போதனா வைத்தியசாலை, நிர்வாக இயக்குனர், நோர்தேன் இண்டஸ்ரிஸ், யாழ்ப்பாணம்.)

இல. 43 பிறவுண்வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி Dr. வினோதினி சண்முகலிங்கம் 30.06.2020 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுருவில் தம்பியப்பா சண்முகலிங்கம், இராசலெட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும் சுபோதினி, சுபேந்திரன், கலாநிதி நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலாம்பிகையின் மைத்துனியும் சத்தியனின் பாசமிகு மாமியாரும் மாணிக்க வாசகன் காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன் ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் நாகேஸ்வரியின் மருமகளும் காலஞ்சென்ற Dr. ராசலிங்கம் மற்றும்,சிவலிங்கம் காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா மற்றும் அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் அருமை மருமகளும் மகாலெட்சுமி காலஞ் சென்ற ஆனந்தலெட்சுமி மற்றும் சந்திரமதி ஆகியோரின் ஆசை பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"குற்றாலம்"**
**43, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் முன்னைநாள் அர்ச்சகர்

### சிவஸ்ரீ புவனேந்திரராஜாசர்மா தேவராஜசர்மா (ராசன் ஐயா)

அவர்கள் கடந்த (29.06.2020) அன்று தென்ஆபிரிக்காவில் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த இரங்கலை அங்குசபாச பிள்ளையார் (கீரிப்பிள்ளையார்) அடியார்கள் சார்பில் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

**கீரிப்பிள்ளையார் கோயில் அடியார்கள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை நாகேஸ்வரியம்மா

**பிறப்பு:31.12.1943** **இறப்பு:01.07.2020**



யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகேஸ்வரியம்மா நேற்று (01.07.2020) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னம்மா தம்பையா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா செல்லாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தில்லை நடராசா, ஈஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், விஜயலட்சுமி விஜயநந்தினி, செந்தில்நாதன் (கனடா), வரதராஜன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தயாபரன், வசந்தகுமார், ஜெயரூபி (கனடா) கலைமதி (பிரான்ஸ்) சத்தியகுமாரி ஆகியோரின் மாமியாரும், சிவானி-தர்மானந்தன், சாமினி-சிவராசா, தருஷா-ரவீந்திரன், மதுசாஜி, சஷிரா, கபிஷா, கார்த்திகா, கார்த்திபன், ஆதித்தன், ரதீபன், கஜீபன், கபிஷா, தனிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மதுசன், டிலக்சன், அபிஷனா, டிலக்ஷனா, கருனிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2020) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாசுவன் சந்தி, நீர்வேலி,**
**தயாபரன் - 0094776510063**
**செந்தில் - 0012176901494**
**ராஜன் - 0033650450755**

**தகவல் :-**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி சிவநேசன் யோகாம்பிகை



யாழ். புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும், கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சிவநேசன் யோகாம்பிகை அவர்கள் 29.06.2020 திங்கட்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான முத்துக்குமாரு செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவநேசன் அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீகலா (புவினா), சுரேகா(வவா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்தில்குமரன் (செந்தில்), பகீந்திரன் (ரகு) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பாலசுந்தரம், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, பொன்ராஜ், கந்தசாமி, இரத்தினராஜா மற்றும் சரஸ்வதி, இரத்தினகோபால், கமலாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோமளம், கமலேஷ்வரி, மகேஷ்வரி, கிறிஸ்ரபெல், சிவபாக்கியம், வசந்தா, காலஞ்சென்ற குணலிங்கம் மற்றும் திருமலர், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் யோகம்மா, தர்மலிங்கம், மகேந்திரன், சிரோன்மணி, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், இந்திரா, ரஞ்சி ஆகியோரின் அன்புச் சகலியும், விதுன், ஆரவி, அகரன், இயலினா, இயலினி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (02.07.2020) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :-**

**185, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி சந்தி,**

**குணலிங்கம் சரஸ்வதி -சகோதரி**
**குணலிங்கம் சபேசன் -பெறாமகன்**

## தேர்தல் பரப்புரைக்கு....

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிர்வாக சேவைமீதும் அதன் அதிகாரிகள்மீதும் இருந்த நம்பிக்கையை இல்லாதுசெய்யும் வகையில் செயற்படும் இந்த அரசு, நிர்வாக சேவைகளுக்கு தொடர்ச்சியாக இராணுவ நியமனங்களை வழங்கிவருகின்றது.

எமது ஆட்சியின்கீழ் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது. ஏனைய கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டதுடன் சுயாதீனமாக வேலைசெய்யக்கூடிய சுதந்திரமும் இருந்தது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டு ஜனவரியில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு எமது ஆட்சியில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த நிலையில் அது இந்த ஆட்சியின்கீழ் தடுத்துநிறுத்தப்பட்டது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவும் குறைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாம் இராணுவத்தினரை மதிக்கின்றோம். அவர்களின் சேவைகளைப் பாராட்டுகின்றோம். ஆனால், எதற்காக நிர்வாக சேவைக்கு இராணுவ நியமனங்கள் வழங்கப்படுகின்றன? இதுவரையில் 20க்கும் மேற்பட்ட நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது அரசு ஊழியர்களால் முடியாது அதனால்தான் இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது என்ற விம்பத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இது அரச ஊழியர்களை அவமதிக்கும் செயலாகும். மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர் போன்ற பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்குகிறார். ஆனால், வங்கி அதிகாரிகளை அழைத்து மிரட்டுகின்றனர். நாடு ஏகாதிபத்தியத்தை நோக்கி பயணிக்கின்றது என்பதையே இது எடுத்துகாட்டுகின்றது. எனவே, சுயாதீன அரச சேவையை இல்லாது செய்வத்ற்கு இடமளிக்கவேண்டாம் என அரச ஊழியர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். ஓகஸ்ட் மாதத்துக்கு பின்னர் அரச ஊழியர்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

க.பொ.த. சாதாரணதரத்துக்குகீழ் கல்வி கற்றவர்களுள் ஒரு லட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. விண்ணப்பங்களும் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டன. 20 லட்சம்பேர் விண்ணப்பித்தி ருந்தனர். இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்தி நேர்முகப்பரீட்சையும் நடத்தப்பட்டது. ஆனால் தற்போது என்ன நடக்கின்றது?

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தை களமிறக்கி, வீடுவீடாகச் சென்று அரச நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுவருகின்றது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கே தடுமாறும் இந்த அரசு எப்படி நியமனங்களை வழங்கும்?

இராணுவத்தினரை ஈடுபடுத்தி இவ்வாறு முன்னெடுக்கப்படும் அரசியல் பரப்புரையைத் தடுத்துநிறுத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொள்கின்றோம். அதேபோல் இராணுவம் அரசியலில் ஈடுபடுவதை நிறுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமும், இராணுவத்தளபதியிடமும் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் எமது ஆட்சியின்கீழ் நடவடிக்கை எடுக்கநேரிடும் -என்றார். (ஒ.5,44)

## வெள்ளைக் கொடியுடன்...

இராணுவத்தினரிடம் சரணடையவில்லை. அதேவேளை, விடுதலைப்புலி உறுப்பினர்கள் எவரும் அவர்களின் உறவினர்களினால் இராணுவத்தினரிடம் ஒப் படைக்கப்படவும் இல்லை. இறுதிப் போர்க்களத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் அனைவரும் புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள்' இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

'2009ஆம் இறுதிப் போரின்போது அரச தரப்புக்கும் விடுதலைப்புலிகள் தரப்புக்கும் விடுதலைப்புலிகளில் சரணடைய விரும்பியவர்களைக் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் நடத்துவது பற்றிப் பேச்சுகள் நடைபெற்றன. விடுதலைப்புலிகள் தரப்பில் சரணடைய விரும்புபவர்கள் வெள்ளைக்கொடிகளுடன் வந்தால் அவர்கள் பாதுகாப்புடன் நடத்தப்படுவர் என்று பேச்சுகளின்போது அரச தரப்பு உத்தரவாதமளித்தது. அதற்கமைய தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் பலர் வெள்ளைக் கொடிகளுடன் சரணடைந்தனர். போராளிகளின் உறவினர்களால் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களும் பலர் இருந்தனர். இதற்கான சாட்சியங்களும் இருந்தன. அவ்வாறு சரணடைந்தவர்கள் தற்போது இல்லை. அவர்களைப் பற்றிய தேடுதல்களும் கேள்விகளும் தற்போது முக்கியமானவையாகும். இந்த முக்கிய விடயம் பற்றி யாரும் பேசுவதில்லை. இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் இது தொடர்பில் தற்போது பொறுப்புடன் பதிலளிக்கவில்லை' என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசா நேற்றுமுன்தினம் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கை தொடர்பில் இராணுவத் தளபதி பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். 'தமிழ் அரசியல்வாதிகளும் புலம்பெயர் விடுதலைப்புலிகள் அமைப்பினரும் அரசுக்கும் இராணுவத்துக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்' எனவும் அவர் சுட்டிக்காட்டி னார்.

'இறுதிப்போரில் வெள்ளைக்கொடிகளுடன் சரணடைந்தவர்கள் என்றும், உறவினர்களினால் ஒப்படைக்கப்பட்ட விடுதலைப்புலிகள் என்றும், காணாமல்போனவர்கள் என்றும் எவரும் இல்லை. இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட சகல விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் புனர்வாழ்வின் பின்னர் விடு விக்கப்பட்டுவிட்டார்கள். அதேவேளை, காணாமல் போனவர்கள் என்று தமிழர் தரப்பால் கூறப்படுவோர் போர்க்களத்தில் உயிரிழந்திருப்பார்கள். எமது இந்த நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை. உண்மைச் சம்பவத்தையே நாம் சொல்கின்றோம்' எனவும் அவர் குறிப் பிட்டார். 'நாம் பொறுப்புடன்தான் பதிலளித்து வருகின்றோம். ஆனால், தமிழ் அரசியல்வாதிகள்தான் பொறுப்பு இல்லாமல் இனங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்' எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார். (ம-22)

## அங்கஜனுக்கு...

ராக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் முறைப்பாட் டுப் பிரிவில் நேற்று இரண்டு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் உபசெயலர் க.குணாளன் இந்த முறைப்பாடுகளை நேற்று மேற்கொண்டுள்ளார்.

அரசின் அபிவிருத்தித் திட்டமான சப்ரிகமவை தனது உத்தியோகபூர்வ முகநூலில் பகிர்ந்து அதனை முன்னிறுத்து வாக்குக் கேட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும் இது தேர்தல் விதிமுறையை மீறிய செயல் என்றும் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நல்லூர் கோவில் வீதியில் அங்கஜன் இராமநாதன் தனது அலுவலகத்தில் தனது படத்தையும், முன்னாள் ஜனாதிபதியும் வேட்பாளருமான மைத்திரிபால சிறிசேனவின் படத்தையும் காட்சிப்படுத்தியுள்ளார் என்றும், இது தேர்தல் விதிமுறைகளை மீறிய செயல் என்றும் மற்றொரு முறைப்பாட்டை அவர் பதிவு செய்துள்ளார். (ஒ.5)

## தேர்தல் ஆணைக்குழுவில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சி.சிறீதரன், சில தினங்களுக்கு முன்னர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் 75 கள்ள வாக்குகள் போட்டதாகத் தெரிவித்திருந்தார். இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஓட்டோ...

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைப் பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது. மௌலவி தனது முச்சக்கர வண்டியில் செட்டிக்குளம் பகுதியிலிருந்து துடரிக்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே விபத்து இடம்பெற்றுள்ளது. (ஒ.5,110)

## விக்னேஸ்வரனுக்கு...

மல்லாகம் குளமங்கால் மகா வித்தியாலயத்தின் 'பாண்ட்' இசை கருவிகளையும் அப்பாடசாலை மாணவிகளையும் வரவேற்பு அணிவகுப்புக்குப் பயன்படுத்தினார் என்று வடமாகாண சபையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

பாடசாலையின் உபகரணங்களையும் மாணவிகளையும் தேர்தல் பரப்புரைக்கு ஈடுபடுத்தியமை தேர்தல் சட்ட விதிகளை மீறிய செயல். அத்துடன் அப்பாடசாலை சாதாரண தரம் வரைதான் வகுப்புகளை கொண்டுள்ளதனால் அம்மாணவிகள் 16 வயதை அல்லது அதிலும் குறைந்த வயதை உடையவர்களாக இருத்தல் வேண்டும். 16 வயதிற்குட்பட்டவர்களை தேர்தல் பரப்புரைகளுக்கு பயன்படுத்துவது தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறும் செயல் என்பதும் குறிப்பிடத்தக்கது ஏனவும் அந்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழ் மக்கள்; தேசிய கூட்டணியின் வேட்பாளர்களாகிய நீதியரசர் விக்னேஸ்வரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் க.அருந்தவபாலன் ஆகியோர் பங்குபற்றிய தேர்தல் பரப்புரைக் கூட்டம் கடந்த ஞாயிற்று கிழமை மல்லாகம் குளமங்கால் பகுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அக்கட்சியின் வேட்பாளர்கள் 'பாண்ட்' இசை அணிவகுப்புடன் மேடைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இதற்குப் பயன்படுத்தப்பட்ட 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் மல்லாகம் குளமங்கால் மகா வித்தியாலயத்துக்கு உரித்துடையது என்பதோடு அவ் 'பாண்ட்' வாத்தியங்களை இசைத்தவர்கள் அப்பாடசாலையின் மாணவிகள் ஆவார் எனவும், இது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு விளக்கம்கோரி உள்ளதோடு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அறியக் கிடக்கின்றது, எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## 2025ஆம் ஆண்டில்...

டில் நாட்டில் வீடில்லா பிரச்சினை முற்றாக ஒழிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இனங்களுக்கிடையில் மதங்களுக்கிடையில் ஒரு ஒற்றுமையை வலியுறுத்துவதற்காகவும் நடைமுறைப்படுத்துவதற்காகவும் என்னை அர்ப்பணித்து செயற்படுவேன்.

பொதுவாக எல்லா மதத்திலும் ஒரு சிலர் பிழையான பாதையில் செல்வதை நாங்கள் பார்க்கின்றோம். அதேபோல் அதிகளவான மதங்களில் நல்வர்களே உள்ளனர். ஒருசிலரே இனவாத சிந்தனை கொண்டவர்களாக உள்ளனர். அடிப்படைவாத சிந்தனை கொண்டவர்களாகவும் பயங்கரவாத சிந்தனை கொண்டவர்களாவும் இருக்கின்றனர்.

**புலிகளின் காலம்**

விடுதலைப் புலிகளின் காலத்தில் பல மோசமான சம்பவங்கள் இடம்பெற்றது. அவற்றை எல்லாம் வைத்து தமிழ் மக்களை குற்றவாளிகளாக பார்த்தமை மிகவும் மோசமான செயலாகும். ஒரு சிலரின் தவறுக்காக ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தை தவறாகச் சொல்ல முடியாது. அவ்வாறு செயற்படுவது தவறானது. அவ்வாறுதான் இந்த நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மிகவும் மோசமான சம்பவம். அதை யார் செய்திருந்தாலும் அனுமதிக்க முடியாது. தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு சிலர் செய்த அந்த தவறை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீது திணிக்க முடியாது. அவ்வாறு திணித்தால் இது தவறானதாகும். பௌத்த மதத்திலும் அவ்வாறான இனவாத சிந்தனை கொண்டவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அடிப்படைவாத சிந்தனை கொண்டவர்கள்.

புரிந்துணர்வு எனது தந்தை ரணசிங்க பிரேமதாஸ இனங்களுக்கிடையில் புரிந்துணர்வோடு நடந்து கொள்ளுங்கள் என்பதைச் சொல்லித் தந்துள்ளார். இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் ஒற்றுமையாக வாழப் பழகுங்கள். இவ்வாறு இருந்தாலே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். சிறிய நாட்டில் நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும். ஒற்றுமையாகவும், சந்தோசமாகவும் இனங்களுக்கிடையில் பிரிந்துவிடாமலும் பிளவுபட்டுவிடாமலும் வாழவேண்டும். அதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாகவும் கோட்பாடாகவும் உள்ளது.

இந்த அழகான தேசத்தை பிரிப்பதற்காக, பிரித்தாழுவதன் ஊடாக தங்கள் அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக ஆட்சியில் நீண்ட காலம் நிலைத்திருப்பதற்காக சதிகாரர்கள் சதி செய்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறான சதிகாரர்களின் வலையில் நாங்கள் வீழ்ந்து விடாமல் மிக நிதானமாக இந்த தேசத்தின் எதிர்காலத்திற்காக அர்ப்பணித்து செயற்படுபவர்களாக உருவாக்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (ஒ,5,110)

# இராவணன் இலங்கையை ஆண்டான் என்பது வெறும் கட்டுக்கதையே!!!

## கோத்தாவின் செயலணி உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் கண்டுபிடிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 2**

**இலங்கையில் இராவணன் என்ற மன்னர் இருந்தார் என்பதை நிரூபிப்பதற்கான எந்தவொரு சான்றுகளும் இல்லை. சில சான்றுகள் இருக்கின்றன என்று சிலரால் கூறப்பட்டாலும் உறுதியாகக் கூறக்கூடிய ஓலைச்சுவடிகளோ அல்லது வேறு எதுவுமோ இல்லை. இராவணன் இலங்கையை ஆண்டார் எனக் கூறப்படுவது கட்டுக்கதையாகும்.**

இவ்வாறு தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராவணன் தொடர்பில் இந்தியாவில் எழுதப்பட்ட இராமாயணம், மகாபாரதம் போன்ற சாகித்திய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இலங்கையில் இராவணன் என்ற மன்னன் இருந்தான் என்பதை நிரூபிப்பதற்கான எந்தவொரு சான்றுகளும் இல்லை. சில சான்றுகள் இருக்கின்றன என்று சிலரால் கூறப்பட்டாலும் உறுதியாகக் கூறக்கூடிய ஓலைச்சுவடிகளோ அல்லது வேறு எதுவுமோ இல்லை. இராவணன் இலங்கையை ஆண்டான் எனக் கூறப்படுவது கட்டுக்கதையாகும்.

தொல்பொருள் என்பதற்கு இனம், மதம், மொழி பாகுபாடு கிடையாது. தொல்பொருள் இருந்தால் அது அந்நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் உரிமையாகும். கிழக்கிலுள்ள தொல்பொருள்களும் அப்படித்தான். அனைவரும் அவற்றைப் பாதுகாக்கவேண்டும். தமிழர்களின் பாரம்பரியங்கள் அழிக்கப்படும், அடையாளம் மறைக்கப்படும் என்றெல்லாம் கூறப்படுவது தவறான விடயமாகும். செயலணிக்கு சிறுபான்மையினத்தை சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவில்லை என்ற வாதமும் ஏற்புடையதாக அமையவில்லை. நாம் அறிக்கை வழங்கியதும் அவை பாதுகாக்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் தமிழ், சிங்கள மக்களிடையே பிரச்சினைகளை உருவாக்குகின்றது. குறிப்பாக .தமிழ் மக்களுக்காக கூட்டமைப்பு உருப்படியாக எதனையும் செய்யவில்லை. அரசாலேயே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. பொய்யுரைத்து இனவாதத்தைப் பரப்புவதே அவர்களின் அரசியலாகும். அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களால் நாட்டில் மேலும் பிரச்சினைகள் உருவாகும். பிரிவினை ஏற்படலாம். எனவே, அனைவரும் ஐக்கியமாக வாழும் நிலை இருந்தால்போதும்- என்றார். (ஒ,5,44)

# வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை கைவிடவில்லை ஆனால் நாங்கள் தனிநாட்டைக் கோரவுமில்லை!

## குழப்பியடிக்கிறார் விக்னேஸ்வரன்

கிளிநொச்சி, ஜூலை 2

நாம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினை கைவிடுவதாக அறிவிக்கவில்லை என்று கூறியது உண்மைதான். அதேநேரம் எந்த சந்தர்ப்பதிலும் தனிநாடு ஒன்றை அமைக்கப் பாடுபடப் போவதாக நாம் குறிப்பிட்டதும் கிடையாது இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன்.

. கிளிநொச்சியில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தை நாம் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம்மிக்க வட்டுகோட்டைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தோம். அந்த கூட்டத்தில் நான் ஆற்றிய உரையில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நாம் கைவிடுவதாக அறிவிக்கவில்லை என்று கூறி இருந்தேன். காரணம் சில கட்சியினர் அதனை முற்றிலும் நிராகரித்ததுபோல் செயற்படுகின்றார்கள். இதுபற்றி என்னிடம் கேள்வி எழுப்பிய சிலர் அப்படியானால் தனிநாட்டு கோரிக்கையை நீங்கள் கைவிடவில்லை என்று இதன் மூலம் கூறுகின்றீர்களா என்று கேட்டார்கள். இதுபற்றி நான் சுருக்கமாக விளக்கவேண்டி இருக்கிறது. தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களான இணைந்த வடக்குகிழக்கில் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் பகிரப்பட்ட இறையாண்மையுடன் கூடிய சமஷ்டி தீர்வு ஒன்றினை அடைவதே எனது கட்சி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நோக்கம் என்று தெளிவாகக் கூறி இருக்கின்றோம்.

அதேவேளை நாம் வட்டுக்கோட்டை தீர்மானத்தைக் கைவிடுவதாக அறிவிக்கவில்லை என்று கூறியதும் உண்மைதான். வட்டுக்கோட்டை தீர்மானம் என்பது ஒரு வரலாற்று உண்மை. அதனை நாம் எமது வரலாற்றுப் புத்தகத்தில் இருந்து அகற்றிவிட முடியாது. வட்டுக்கோட்டை தீர்மானத்தில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதிலே, சமதர்மத் தமிழீழ அரசை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்ற ஒரு விடயம் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் இன்றும் அவசியமானவை மற்றும் பொருத்தமானவையும் கூட. எந்த சந்தர்ப்பதிலும் தனிநாடு ஒன்றை அமைக்கப் பாடுபடப்போவதாக நாம் குறிப்பிட்டது கிடையாது. எமது கோரிக்கை சமஷ்டி அரசியல் முறை எனினும் தமிழ் மக்கள் ஒருதேசிய இனம், அவர்களின் சுய நிர்ணய உரிமை, சாதி ஒழிப்பு, சுரண்டல் ஒழிப்பு போன்ற பல விடயங்களை வட்டுக்கோட்டைத் தீர்மானம் வலியுறுத்துகின்றது. இவற்றைதமிழ் மக்கள் ஒருபோதும் கைவிடமுடியாது. ஆகவேதான் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைநாம் கைவிட்டதாக அறிவிக்கவில்லை என்று கூறியிருந்தேன்.

இன்றையதினம் நாங்கள் எம்மக்களுக்காக ஒன்றிணைந்து உங்கள் முன் வாக்கு கேட்க வந்திருக்கின்றோம். எமது கூட்டணியில் வேறு சிலரையும் இணைத்துக் கொள்வதற்காக முயன்றிருந்தோம். ஆனால் துரதிர்ஸ்டவச மாக அது இம்முறை கைகூடி வரவில்லை. எதிர்காலத்தில் ஒத்த கொள்கையுடையவர்களை ஒன்றாக இணைப்பதற்காக தொடர்ந்து முயற்சிப்போம். எம்மை மாற்றுத் தலைமை என்று பலர் கூறுகின்றார்கள். ஆனால் மாற்றுத் தலைமை என்று கூறுவது நாம் மாற்றுக்கொள்கை ஒன்றை முன் வைத்திருக்கின்றோம் என்றுபொருள் அல்ல. தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகள் எல்லாமே இணைந்த வடக்குகிழக்கில் சமஷ்டி தீர்வினையே கோருகின்றன. தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட சமஷ:டி பற்றியும், வடக்கு கிழக்கு இணைப்புப் பற்றியும், இறையாண்மை பற்றியும் கூறி வந்துள்ளது.

ஆனால், அரசாங்கங்களுக்கு முண்டுகொடுப்பதன் மூலமும் இனப்படுகொலைக்கு நீதிகோரி எமது மக்கள் மேற்கொண்டுவரும் போராட்டங்களை மழுங்கடிப்பதன் மூலமும் அரசாங்கத்தை குளிரச் செய்து ஏதோ ஒரு தீர்வினைப் பெற்றுவிடலாம் என்ற வழி வரைபடத்தின் அடிப்படையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டு வந்துள்ளது. அத்துடன் தேர்தல்கள் முடிவடைந்தவுடன் சமஷ்டி கோட்பாடுகளையும் தாயகக் கோட்பாடுகளையும் சாத்தியம் அற்றவை என்று கூட்டமைப்பு காற்றில் பறக்கவிடுவது வரலாறு. அது உங்களுக்குத் தெரியும் - என்றார். (ம)

**Holy Cross School of Health Science**
767/4, Beach Road, Jaffna

**Diploma in Nursing (NVQ Level V )**
Qualification-G.C.E (A/L) completed
Duration - 3 years ( 2 years Studies, 1 year training with salary)
Closing date - 20/07/2020

**Basic Nursing**
Qualification - G.C.E (O/L)
Duration - 9 Months
Closing date - 20/07/2020

இதற்கான விண்ணப்பங்களை முடிவுத்திகதிக்கு முன்னதாக தங்களுடைய சுயவிபரக் கோவையுடன் (Bio Data) நேரடியாகவோ Or தபால் மூலமாகவோ எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்புகளுக்கு:**
**021 222 2423 / 077 115 9391**



### சிவில் பாதுகாப்புப் பிரிவினர் பாடசாலைகளில் சிரமதானம்

கிளிநொச்சி, ஜூலை 2

பாடசாலைகள் தற்போது மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலைகளைச் சுத்தம்செய்யும் பணிகளில் கிளிநொச்சி சிவில் பாதுகாப்புப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். பாடசாலைகளில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளதுடன், தொற்று நீக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்களது பணிகளை ஆரம்பித்துள்ள சிவில் பாதுகாப்புப் பிரிவினர், தொடர்ச்சியாக ஒரு வாரத்துக்கு கிளிநொச்சியின் ஏனைய பாடசாலைகளிலும் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். (க-214)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.